Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய நாகரிகம்! நாளைய நாகரிகம்!

சகல நிகழ்வுகளுக்கும் ராசியான ஸ்தாபனங்கள்



மகாராசி சில்க்ஸ்

59 நவீன சந்தை உட்புறம் யாழ்ப்பாணம்.

ரோசி சில்க்ஸ்

08. ந பெரியகடை வீதி யாழ்ப்பாணம்.

T.P.-0777 286247

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2036 மாசி – 04 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 முஹர்ரம் 06 (16.02.2005) புதன்கிழமை இதழ்: 139

கௌசல்யன் கொலையைக் கண்டித்து

## யாழ்.நகரில் நேற்று கண்டனப் பேரணி!



(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் மற்றும் போராளிகள், மாமனிதர் சந்திரநேரு ஆகியோரின் படுகொலைகளைக் கண்டிக்கும் வகையிலும் - வடபகுதியில் சுனாமியால்

(12 ஆம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சி - மன்னார் - மட்டக்களப்பிலும்

## படுகொலைகளைக் கண்டித்து அரசுக்கெதிராகப் பேரணிகள்!


(மன்னார், கிளிநொச்சி, மட்டக்களப்பு)

மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் போராளிகளும், மாமனிதர் சந்திரநேருவும் வெலிக்கந்தவில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பில் நேற்று மாபெரும் கண்டனப் பேரணிகள் இடம்பெற்றன.

கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், நேற்றுக்காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்துக்கு முன்பாகவிருந்தும், கிளிநொச்சி முருகன் கோவிலுக்கு முன்பாகவ்விருந்தும், இரு அணிகளாக ஆரம்பித்த பேரணிகள், கிளிநொச்சி போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலக முன்றலில் சங்கமித்தன. அங்கு மகஜர் கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தைச் சேர்ந்த அ.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில், கிளிநொச்சி வெகுஜன

(12 ஆம் பக்கம் பார்க்க)



கிளிநொச்சியில்..

# கூட்டணிக் குழப்பத்தைத் தீர்க்க கொழும்பில் உச்சக்கட்ட முயற்சி!

## இருதரப்பும் பிளவை விரும்பவில்லையாம்

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இரண்டு பிரதான கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான விரிசல் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கின்ற போதும் -

இந்த முரண்பாடுகளைத் தீர்த்து இரு தரப்புக்கும் இடையில் சுமுகநிலையைக் கொண்டு வருவதற்கான

சந்திரிகாவின் உரைக்கு

## ஜனாதிபதி செயலகம் புதிய விளக்கமளிப்பு!

# இருதரப்பும் பிளவை விரும்பவில்லையாம்

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இரண்டு பிரதான கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான விரிசல் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கின்ற போதும் -

இந்த முரண்பாடுகளைத் தீர்த்து இரு தரப்புக்கும் இடையில் சுமுகநிலையைக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இரு கட்சிகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் பகிரங்க கருத்து மோதல்களாக உருவாகியிருக்கின்ற போதும் - ஆளும் கூட்டணியை விட்டு வெளியேறுவது குறித்து ஜே.வி.பியோ, அல்லது கூட்டணியிலிருந்து ஜே.வி.பியை நீக்குவதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியோ எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி செயலகம் புதிய விளக்கமளிப்பு!

(கொழும்பு)

இலங்கையின் ஒருபகுதிக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உரிமை கோருவதனால் அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது அவசியமென ஜனாதிபதி சந்திரிகா - நிட்டம்புவவில் உரையாற்றியபோது குறிப்பிட்டதாகத் தெரிவித்து ஊடகங்கள் வெளியிட்ட செய்திக்கு ஜனாதிபதி செயலகம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசுடனான இணக்கப்பாடு ஒருபோதும் முறிவடையாது!

## ஜே.வி.பி. எம்.பி. சந்திரசேகரன்

(லண்டன்)

அரசாங்கத்துக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான இணக்கப்பாடு ஒருபோதும் முறிவடையாது என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

நேற்று பி.பி.சி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

# சந்திரநேரு குடும்பத்துடன் தமிழ்ச்செல்வன் சந்திப்பு!



(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், மாமனிதர் சந்திரநேரு அரியநாயகத்தின் குடும்பத்தினரை நேற்றுச் சந்தித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை எவராலும் பிரித்துவிட முடியாதாம்!

## அமைச்சர் மங்கள சமரவீர அறிக்கை

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த பொறுப்பினை நிறைவேற்றும்வரை அதனை பிளவுபடுத்துவதற்கு எந்தவொரு சக்தியாலும் முடியாதென்று அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கூட்டணி அரசாங்கத்தை ஏற்படுத்த தம்மை அர்ப்பணித்த முற்போக்குக் கருத்துள்ள மக்கள் இந்தப் பிளவை அனுமதிக்க மாட்டார்கள்.

நாட்டின் வரலாற்றில் இந்தக் கூட்டணி முன்னேற்றகரமான மக்கள் நட்புறவு மைய அரசியலாக இருக்கின்றது. நாட்டுக்குப் பல சவால்கள் விடுக்கப்பட்ட சமயங்களில் அது உருவாக்கப்பட்டது.

சென்ற பொதுத் தேர்தலில் மக்கள் அளித்த வாக்குகள் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கோ, ஜே.வி.பிக்கோ அல்லது வேறு ஒரு கட்சிக்கோ வழங்கப்பட்டதல்ல.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான அரசியற் கொள்கைகளுக்கு தேர்தல் முடிவு தெளிவான வெற்றியாக அமைந்தது.


மறுமலர்ச்சி மூலம் நாட்டை மீளக் கட்டியெழுப்பும் நோக்கத்தை எய்துவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு மேலும் கடப்பாடு உண்டு. இந்த நோக்கத்தை எய்துவதற்குத் தடையாக உள்ளவற்றை நீக்கும் கூட்டுப்பலம் முன்னணிக்கு உண்டென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


# கௌசல்யன் கொலையைக் கண்டித்து நேற்று இடம்பெற்ற பேரணிகளிலிருந்து...

## யாழ்ப்பாணத்தில்....














## கிளிநொச்சியில்....









# சங்கானையில் 3 வீடுகளில் திருடர்கள் கைவரிசை!

(மானிப்பாய்)

சங்கானைப் பகுதியில் ஒரே இரவில் மூன்று வீடுகள் உடைக்கப்பட்டு அங்கிருந்து பெறுமதியான நகைகளும் உடுப்புக்களும் திருடப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இந்த துணிகர திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சங்கானை - காளி கோவிலடியைச் சேர்ந்த மகாலிங்கம் சிதம்பர நடேசன் என்பவரின் வீட்டிற்குள் யன்னல் கம்பிகளை வளைத்து உட்சென்ற திருடர்கள், பூட்டிய அலுமாரியை உடைத்து அங்கிருந்த பதக்கத்துடன் கூடிய சங்கிலி, அட்டியல் உட்பட 12 பவுண் பெறுமதியான நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இதேவேளை - ஆஸ்பத்திரி வீதியைச்சேர்ந்த சங்கரப்பிள்ளை சிவலிங்கம், அரியம் முருகையா ஆகியோரின் வீடுகளிலும் உட்புகுந்த திருடர்கள், உடுபுடைவகள் வைத்திருந்த சூட்கேசை எடுத்துச் சென்றுள்ளனர்.

தொலைக்காட்சியில் படம் பார்த்து விட்டு நித்திரைக்குச் சென்ற சிறிது நேரத்தில் இந்தச் சம்பவங்கள் நடைபெற்றதாக சம்பந்தப்பட்டோர் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து விசாரணை நடைபெற்றுவருகிறது. (48)

## ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்விவலயத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு இன்று நண்பகல் 12 மணிக்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் என்.வரதராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

## விஞ்ஞானப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.விஞ்ஞானச் சங்கம் நடத்தும் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான விஞ்ஞானப் பேச்சுப் போட்டி எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நுண்கலை கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

போட்டியில் பங்குபற்றுவதற்கு விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதி அட்டை அந்தந்த பாடசாலை அதிபர்களுக்கூடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# தியாகி அறக்கொடை நிறுவனத்தின் கல்வி ஊக்குவிப்பு உதவித்திட்டம்!

தியாகி அறக்கொடை நிறுவனம் நடத்தும் கல்வி ஊக்குவிப்பு உதவித்திட்ட வைபவம் இன்று மாலை 3.30 மணிக்கு வரணி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இடைக்குறிச்சி ஸ்ரீசுப்ரமணிய வித்தியாலய அதிபர் சு.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் -

தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சாவகச்சேரி பிரதேசசபை செயலாளர் த.பாலச்சந்திரன், ஆங்கில ஆசிரியர் அ.தம்பிராசா ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் அவுஸ்ரேலிய நலன்விரும்பி வா.பரமேந்திரன், தென்மராட்சி கோட்ட அரசியற்துறைப்பொறுப்பாளர் ஈஸ்வரன் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

# கல்விச் சுற்றுலா தெரிவுப் பரீட்சை!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்க பணியாளர்களில் இருந்து கல்விச் சுற்றுலாவுக்கு மூவரைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை நாளை காலை 10 மணிக்கு குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிப் பரீட்சையில் சகல கூட்டுறவுச் சங்கங்களினதும் பொதுமுகாமையாளர்கள் மட்டும் பங்குபற்றலாமென கூட்டுறவுச் சபைச் செயலாளர் பொ.சண்முகசுந்தரம் அறிவித்துள்ளார்.

## விஞ்ஞானப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்பட்டுவந்த யோகாசன தியானப் பயிற்சி வகுப்புக்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# ஆயுதக் குழுக்கள், பொதுக்கட்டமைப்பு சமாதான முயற்சிக்கு முட்டுக்கட்டைகள்!

## சொல்ஹெய்மிடம் அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு



**சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு – அரச படையினருடன் இயங்கும் ஆயுதக்குழுக்களிடம் உள்ள ஆயுதங்களைக் களைய வேண்டும். அனர்த்த நிவாரணத்துக்காக வெளிநாடுகள் அளித்துள்ள நிதியை, நீதியாகப் பகிர்வதற்குப் பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும். இவை இரண்டையும் இலங்கை அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நோர்வே அனுசரணையாளர் குழுவிடம் எடுத்துக்கூறியுள்ளார்.**

(கொழும்பு)

கௌசல்யன் படுகொலையை அடுத்து, இலங்கையில் ஏற்பட்டுள்ள யுத்தநிறுத்தம் தொடர்பாக நிச்சயமற்ற நிலைமையைப் போக்கும் ஒரு முயற்சியாக நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், நோர்வே வெளிவிவகார அமைச்சு அதிகாரி லிசா கோல்டன் ஆகியோர் அடங்கிய குழு நேற்றுமுன்தினம் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை லண்டனில் அவரது இல்லத்தில் சந்தித்தனர்.

சுமார் மூன்று மணிநேரமாக நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கூறுகையில் -

அமைதிப் பேச்சுக்களுக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்க இலங்கை அரசு, இரண்டு குறிப்பிடத்தக்க வழிகளில் உதவிசெய்ய வேண்டியுள்ள தேவை உள்ளது.

ஒன்று - இலங்கை இராணுவத்துடன் இயங்கும் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்படவேண்டும். அல்லது அவர்களை அரச, படைப்பிரிவுகளுக்குள் உள்வாங்கி வடக்கு - கிழக்குக்கு வெளியே நிறுத்தப்படவேண்டும். 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே இந்த விடயம் உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் அரசால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட அவரது குழுவினர் அரச கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு, விடுதலைப்புலிகளின் கடுமையான கண்டனத்தையும் தெரிவித்தார்.

அமைதிப்பேச்சுக்களுக்கான சூழ்நிலைக்குரிய இரண்டாவது வழிமுறை குறித்து, கலாநிதி அன்ரன் பாலசிங்கம் விளக்கமளிக்கையில் -

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் புனரமைப்பு, புனர்நிர்மாண வேலைத்திட்டங்களை மேற்கொள்ள, வெளிநாடுகள் வழங்கிய நிதியை நீதியாகப் பகிர்வதற்குப் புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பு ஒன்றை, அரசு விரைவாக உருவாக்கவேண்டும். இது விடயத்தில் தற்போது தொடரும் இழுபறி முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

ஆனால், அமைதிப்பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான உகந்த சூழ்நிலையை உருவாக்கும் எந்த நடவடிக்கையையும் அரசு மேற்கொள்ளவதாக எமக்குத் தெரியவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அவசர கால சட்டத்துக்கு ஐ.தே.கட்சி எதிர்ப்பு!

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தை சுனாமியால் பாதிக்கப்பட்ட 14 மாவட்டங்கள் முழுவதற்கும் அமுல் செய்ய முடியாது என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அரசாங்கம் சுனாமியின்போது உரிய முறையில் நிவாரணங்களை விநியோகிக்காமல் இருந்தமை- அது எந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தாலும் அதில் பிரயோசனமில்லை என்பதையே காட்டுவதாகவும் என அந்தச் கட்சி மேலும் தெரிவித்துள்ளது.

## காலியிலும் விமான நிலையம்

(கொழும்பு)

இலங்கையில் இரண்டாவது சர்வதேச விமான நிலையம் காலி மாவட்டத்திலுள்ள கொக்கல பகுதியில் அமைக்கப்படவுள்ளது. இதற்காக 958 ஏக்கர் நிலம் அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தென்பிராந்திய அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட காலி புதிய நகர திட்டத்துக்கான இந்தக் குழுவே இதற்கான யோசனையை முன்வைத்ததாகத் தெரியவருகிறது. இதன்படி காலி சர்வதேச விளையாட்டு மைதானம் மத்தகொடையில் புனர்நிர்மாணிக்கப்படுவதோடு, அதன் அருகில் விமான நிலையம் அமைக்கப்படவுள்ளது. விமான நிலையத்துக்கான ஓடுபாதை குறித்தும் இந்தக் குழு கவனம் செலுத்தியுள்ளது.

காலி ரயில் நிலையம், பஸ் தரிப்பிடம், சிறைச்சாலை என்பனவும் நகரின் நடுப்பகுதிக்குக் கொண்டுவரப்படவுள்ளது.

# ஜே.வி.பியுடன் பேச்சு நடத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா நிபந்தனை!

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும் - ஜே.வி.பிக்கும் இடையிலான சந்திப்புத் தொடர்பாக புதிய சர்ச்சைகள் தோன்றியுள்ளன.

சுனாமி காரணமாக ஏற்பட்ட தேசிய அனர்த்தத்தின்பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படுவது தொடர்பாக ஜனாதிபதி தரப்பு அக்கறை செலுத்தியது.

இருந்தபோதிலும், அதற்கான சாத்தியங்கள் ஏற்படாத நிலையில் ஜே.வி.பியுடனான பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்து அரசாங்கம் தற்போது கவனம் செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து ஜே.வி.பியின் நீண்டகாலக் கோரிக்கையைப் பரிசீலித்து அவர்களுடன் பேச்சு நடத்துவதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஜே.வி.பியுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு ஜனாதிபதி நிபந்தனைகளை விதித்துள்ளதாகத் தெரியவருகிறது.

அரசாங்கத்தின் பங்காளிகளாக இருந்தவாறே அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சித்தமை தொடர்பாகத் தன்னிடம் எழுத்துமூலமாக மன்னிப்புக் கோரவேண்டும் என்றும், இதுபோன்ற விமர்சனங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதற்கான உத்தரவாதம் வழங்கப்படவேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளதாகவும் இந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டால் மட்டுமே ஜே.வி.பியுடன் பேச்சுக்களைத் தொடரமுடியும் என்று ஜனாதிபதி உறுதிபடத் தெரிவித்திருப்பதாகவும் ஜனாதிபதி மாளிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. (01)



# உடத்தலவின்ன கொலைச் சம்பவத்துடன் தனக்கு எதுவித தொடர்பும் இல்லையாம்

## அனுருத்த ரத்வத்த சாட்சியம்

கண்டி உடத்தலவின்னவில் 10 முஸ்லிம்கள் கொலைசெய்யப்பட்ட சம்பத்துடன் தமக்கு எந்தவித தொடர்பும் இல்லையென முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த சாட்சியமளித்துள்ளார். நேற்று முன்தினம் கொழும்பு நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையின்போதே அவர் இவ்வாறு சாட்சியமளித்தார்.

2001 டிசம்பர் 5 ஆம் திகதி தேர்தல் நடைபெற்ற வேளையில்- தாம் கொலை நடந்ததாகக் கூறப்படும் இடத்தில் இருக்கவில்லை என்றும் அவர் சாட்சியம் அளித்தார். தேர்தல் ஆணையாளர் வழங்கிய ஆலோசனைப்படி தாம் வீட்டில் இருந்தே தமது வாக்கை அளித்ததாகவும், கொலை குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள தமது புதல்வர்களும் வீட்டிலேயே இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் மற்றும் கலீம் ஆகியோரின் விருப்புத் தெரிவு வாக்குகள் தொடர்பான முறுகல் காரணமாகக் கண்டியில் பிரச்சினை ஏற்பட்டது.

தமது வாகனங்கள் இரண்டைக் கடத்திச் சென்றவர்களே இந்தக் கொலைகளைச் செய்திருப்பதாகத் தெரிவித்த அவர், ரவூப் ஹக்கீம் போன்றவர்களின் அரசியல் காரணமாகவே தாம் இன்று சாட்சியமளிக்க வேண்டியுள்ளதாகவும், தாம் குற்றவாளி இல்லையெனவும் குறிப்பிட்டார். இந்த நிலையில் வழக்கு விசாரணை இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டது. (01)

# எஸ்.பியின் விவகாரத்தால் ஐ.தே.கவுக்குள் முரண்பாடு

(கொழும்பு)

சிறைவைக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தர் எஸ்.பி.திஸநாயக்காவை விடுதலை செய்யுமாறு, ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து கட்சியின் முக்கியஸ்தர்களிடையில் கருத்து வேறுபாடுகள் தோன்றியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களுமான மிலிந்த மொரகொட மற்றும் மகிந்த சமரசிங்க ஆகியோர் தமது அதிருப்தி குறித்து கட்சித் தலைமைப்பீடத்திடம் நேரடியாக முறையிட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

நாடு தேசிய அளவில் அனர்த்தம் ஒன்றைச் சந்தித்துள்ள நிலையில், தனி ஒருவருக்காக நாட்டைத் திசைதிருப்பும் விதமான கட்சியின் செயற்பாடுகள் இடம்பெறுவது மக்கள் மத்தியில் கட்சியின் செல்வாக்கில் கணிசமான பாதிப்பை ஏற்படுத்தும் என்று இவர்கள் சுட்டிகாட்டியுள்ளனர்.

இதேவேளை கட்சியின் ஆரம்பகாலம்முதல் செயற்படும் முக்கியஸ்தர்களுக்கு வழங்கப்படாத முக்கியத்துவம் இடையில் வந்து கட்சியில் இணைந்துகொண்ட எஸ்.பி.திஸநாயக்காவுக்கு வழங்கப்படுவது கட்சியின் மூத்த உறுப்பினர்கள் மத்தியில் அதிருப்தி அலைகளை ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (12)

# சொல்ஹெய்ம் 20 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளார்



நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் எதிர்வரும் 20 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளார்.

நேற்றுமுன்தினம் லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து பேசிய விடயங்கள் குறித்து, அரசு தரப்புக்கு எடுத்துக் கூறுவதற்கே இலங்கைக்கு வருகிறார் என்று தெரியவருகிறது.

ஐந்து நாள் விஜயம் மேற்கொண்டு வரும் இவர் இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் கிளிநொச்சிக்குச் சென்று புலிகளின் பிரதிநிதிகளுடனும், கொழும்பில் ஜனாதிபதி, சமாதான செயலகப்பணிப்பாளர், எதிர்க்கட்சித்தலைவர், பிரதமர் மற்றும் முக்கியஸ்தர்களுடன் பேச்சு நடத்துவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

# ஜனாதிபதியின் குறைபாட்டை எவராலும் திருத்த முடியாது!

## ஓமல்பே சோபித தேரர் கூறுகிறார்

ஜனாதிபதி சந்திரிகாவின் தாமதம் காரணமாக நேற்று முன்தினம் நடைபெறவிருந்த சந்திப்பு நடைபெறவில்லை என, ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

ஜனாதிபதிக்கும் ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் மாலை 3.30 மணிக்கு ஜனாதிபதி மாளிகையில் இந்தச் சந்திப்பு நடைபெறுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் அங்கு சென்றிருந்த ஹெல உறுமய உறுப்பினர்களைச் சந்திப்பதற்கு ஜனாதிபதி செல்லத் தாமதமானதால் சந்திப்பை ரத்துச் செய்துவிட்டு ஹெல உறுமயவின் பௌத்த பிக்குகள் ஜனாதிபதி மாளிகையிலிருந்து வெளியேறினர்.

இது குறித்து ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபிததேரர் கருத்துத் தெரிவிக்கையில் -

ஜனாதிபதிக்கு நேரத்துக்கு வேலை செய்யமுடியாது என்பது சாதாரணமாக அனைவரும் அறிந்த ஒரு குறைபாடுதான். அதை எவராலும் திருத்திக்கொள்ள முடியாது. ஜனாதிபதியின் அழைப்பின்பேரிலேயே நாம் அங்கு சென்றோம். அவரின் அழைப்புக்கு நன்றி.

ஜனாதிபதியை சந்திக்க முடியாமைக்கு வருந்துகிறோம். எமக்கு நேரத்தை வீணடிக்கமுடியாத காரணத்தால் சந்திப்பை ரத்துச் செய்துவிட்டு வந்துவிட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# ஊடக மாநாட்டுக்கு ஏற்பாடு செய்யுமாறு ஆயுதக்குழு உறுப்பினர்கள் கோரிக்கை

மொனராகல சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் ஆயுதக் குழுவின் நான்கு உறுப்பினர்களும் தமக்கு ஊடக மாநாடு ஒன்றை ஒழுங்கு செய்து தருமாறு கோரியுள்ளனர்.

தம்மை நீதிமன்றத்தில் ஆஜர்செய்யுமாறு கோரியே இவர்கள் நேற்று முன்தினம் முதல் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மட்டக்களப்புப் பகுதியில் ஆயுதங்களுடன் நடமாடினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டுப் பின்னர் பாதுகாப்புக் காரணங்களுக்காக மட்டக்களப்பிலிருந்து மொனராகல சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர்.

இந்த நிலையில் பாதுகாப்புக் காரணங்களுக்காகவே மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர்செய்ய முடியவில்லை எனச் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர். (01)

# ஆசிய விளையாட்டுப் போட்டியில் இம்முறை கிரிக்கெட் இல்லை!

## ஒத்துழைப்பின்மையே காரணம்

(புதுடெல்கி)

அடுத்த ஆண்டு டோஹாவில் நடைபெறும் ஆசிய விளையாட்டுப் போட்டியிலிருந்து கிரிக்கெட் நீக்கப்பட்டுள்ளது.

ஆசிய கிரிக்கெட் சபையிடமிருந்து போதிய ஆதரவு கிடைக்காததே இதற்குக் காரணம். இதை நிருபர்களிடம் ஆசிய ஒலிம்பிக் சபை பொதுச்செயலர் ரன்தீர் சிங் தெரிவித்தார்.

குவைத்தில் கடந்த 5ஆம் திகதி நடைபெற்ற ஆசிய ஒலிம்பிக் சபை செயற்குழுவில் இந்த முடிவு எடுக்கப்பட்டது எனவும் அவர் தெரிவித்தார்.

முன்னிலை வீரர்களைக் கொண்ட அணிகளை அனுப்பமுடியாதென ஆசிய கிரிக்கெட் சபை தெரிவித்தது. மேலும் 19 வயதுக்குட்பட்டோருக்கான அணியை அனுப்புவதாகவும் தெரிவித்தது.

ஆனால் விளையாட்டுப் போட்டிகளின் போது தலைசிறந்த வீரர்களைக் கொண்ட அணியைத்தான் பங்கேற்க அனுமதிக்க வேண்டுமென நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். ஆகவே ஆசிய விளையாட்டுப் போட்டி பட்டியலில் இருந்து கிரிக்கெட்டை நீக்கிவிட்டோம்.

எனினும் 2010இல் டெல்கியில் நடைபெறவுள்ள கொமன்வெல்த் போட்டியில் கிரிக்கெட் இடம்பெறும் வாய்ப்பு இருப்பதை மறுக்கமுடியாது.

கொமன்வெல்த் போட்டியில் கிரிக்கெட்டைச் சேர்ப்பதில் மிகவும் ஆவலுடன் இருக்கிறோம். தொடர்ந்துவரும் ஆசியப் போட்டிகளிலும் சேர்க்க விரும்புகிறோம்.

ஆனால் சர்வதேச கிரிக்கெட் சபை, ஆசிய கிரிக்கெட் சபை போன்ற அமைப்புக்களிடமிருந்து கிடைக்கும் வரவேற்பைப் பொறுத்துத்தான் அது நடைமுறையில் சாத்தியமாகும்.

கிரிக்கெட்டை பல்வேறு நாடுகளுக்கும் பரப்பவேண்டுமென சர்வதேச கிரிக்கெட் சபை போன்ற கிரிக்கெட் அமைப்புகள் நினைத்தால், ஆசிய போட்டி, கொமன்வெல்த் போட்டி போன்றவற்றிலும் பங்கேற்கவேண்டும். அப்போது தான் கிரிக்கெட் வளரும்.

2010ஆம் ஆண்டு கொமன்வெல்த் போட்டிகளில் கிரிக்கெட் சேர்க்கப்படுமா? என்பது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையைப் பொறுத்தே உள்ளது. முதலில் அவர்கள் எங்களை ஆதரிக்க வேண்டும். பின்பு சர்வதேச அமைப்பின் ஒப்புதலைப் பெறவேண்டும் என்றார்.

## பாகிஸ்தான் அணி வீரர்கள் சனியன்றே அறிவிக்கப்படும்

(கராச்சி)


இந்திய சுற்றுப்பயணத்துக்கான 16 பேர் கொண்ட பாகிஸ்தான் கிரிக்கெட் அணியை அறிவிப்பதில் ஒருநாள் தாமதம் ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணி எதிர்வரும் வெள்ளிக்கிழமை அறிவிக்கப்படுவதாக இருந்தது. ஆனால் ஒருநாள் தாமதமாக சனிக்கிழமை தான் அறிவிக்கப்படும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

அணியின் அதிவேக பந்துவீச்சாளர் சொகைப் அக்தர் உட்பட வீரர்களின் உடற்தகுதியை – வெளிநாட்டுப் பயிற்சியாளர்களைக் கொண்டு தீர்மானிக்க உள்ளதால், இந்தத் தாமதம் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்தது.

வெளிநாட்டுப் பயிற்சியாளர்கள் டேரில் லிப்சன் மற்றும் மர்ரே ஸ்டீவன்சன் பெப்ரவரி 19ஆம் திகதிதான் லாகூருக்கு வருவர். அதன் பிறகுதான் வீரர்கள் தெரிவு இடம்பெறும் எனவும் தெரியவருகிறது.

# சர்வதேச தரவரிசையில் 99ஆவது இடத்தைப் பிடித்தார் இந்திய வீராங்கனை சானியா!



(புதுடெல்கி)

இந்திய ரெனிஸ் வீராங்கனை சானியா மிர்சா 35 பேரை ஒரே வீச்சில் முந்தி, சர்வதேச மகளிர் ரெனிஸ் தரவரிசையில் 99ஆவது இடத்துக்கு முன்னேறினார்.

அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸில் சானியா 3ஆவது சுற்றுவரை வந்தார். அந்தப் போட்டியில் சம்பியன் பட்டம்பெற்ற செரினா வில்லியம்ஸுடன் 3ஆவது சுற்றில் சானியா மோதினார்.

சமீபத்தில் ஹைதராபாத் ஓபன் ரெனிஸ் போட்டியிலும் சானியா மிர்சா சம்பியன் பட்டத்தை வென்று, தனது புகழுக்கு மேலும் பெருமை சேர்த்தார். வெற்றிமேல் வெற்றியைக் குவித்துவரும் சானியா மிர்சாவின் அந்தஸ்து உலக தரவரிசைப் பட்டியலில் உயர்ந்திருக்கிறது.

நேற்றுமுன்தினம் உலக மகளிர் ரெனிஸ் சங்கம் தரவரிசைப்பட்டியலை வெளியிட்டது. கடந்தவாரம் வரை 134ஆவது இடத்தில்தான் சானியா இருந்தார். இப்போது 35 பேரை முந்திக்கொண்டு, 99ஆவது இடத்தைப் பெற்றிருக்கிறார்.

இப்போது 18 வயதாகும் சானியா, இனி வரும் ஆண்டுகளில் மேலும் பல வெற்றிகளைக் குவித்து, உலக தரவரிசைப்பட்டியலில் இன்னும் முன்னேறுவார் என்று ரெனிஸ் வட்டாரத்தில் பேசப்படுகிறது.

# பாகிஸ்தான் அணியில் அக்தர் இடம்பெறுவார்!

## கப்டன் இன்சமாம் நம்பிக்கை



(புதுடெல்கி)

இந்திய சுற்றுப்பயணத்துக்கான பாகிஸ்தான் அணியில் சொகைப் அக்தர் நிச்சயம் இடம் பெறுவார் என்று கப்டன் இன்சமாம் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி எதிர்வரும் 25ஆம் திகதி இந்தியா வரவுள்ளது. அந்த அணி இந்தியாவுடன் 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடும்.

இதற்கிடையில் தசைப்பிடிப்புக் காரணமாக அவுஸ்ரேலிய போட்டியிலிருந்து பாதியில் விலகிய பாகிஸ்தான் அணியின் வேகப்பந்துவீச்சாளர் அக்தர் உடற்தகுதி பெற்று அணியில் இடம் பிடிப்பாரா? என்பது கேள்விக்குறியாகி யுள்ளது. இரவு விடுதி விவகாரத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் விமர்சனத்துக்குள்ளாகியுள்ள அக்தர் – அணியில் இடம்பிடிப்பதற்கு சக வீரர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும் செய்திகள் வெளியாகின.

இந்த நிலையில் விளம்பரப் படம் ஒன்றில் நடிக்க கொல்கத்தா வந்துள்ள பாகிஸ்தான் அணியின் கப்டன் இன்சமாம் கூறியதாவது –

சொகைப் அக்தர் எங்கள் அணியின் முக்கிய பந்துவீச்சாளர் ஆவார். அவுஸ்ரேலிய பயணத்தில் அவர் நன்றாகப் பந்துவீசினார். அவருக்கு உடற்தகுதியில் லேசான பிரச்சினை இருக்கிறது. அவர் உடற்தகுதி பெற்றுவிட்டால், இந்தியப் பயணத்துக்கான பாகிஸ்தான் அணியில் நிச்சயம் இடம்பெறுவார்.

அகமதாபாத் டெஸ்டில் ஆட மறுப்பது பற்றி நான் கருத்துக்கூறமுடியாது. இது வீரர்கள் எடுத்த முடிவு அல்ல. சபை இது குறித்துக் கவனித்து வருகிறது. அது வீரர்களின் நலனை மனதிற்கொள்ளும்.

பாகிஸ்தான் அணியில் பெரும்பாலும் அனுபவம் இல்லாத வீரர்களே உள்ளனர். ஆனால் அதே நேரத்தில் அனைவரும் சிறப்பு ஆடக்கூடியவர்கள். மக்கள் அனைவரும் விரும்பும் விதத்தில் போட்டி இருக்கும் இவ்வாறு இன்சமாம் கூறினார்.

## விளையாட்டு

# 2012 ஒலிம்பிக்; ரஷ்யா விருப்பம்

(மொஸ்கோ)

எதிர்வரும் 2012ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கு ரஷ்யா விருப்பம் தெரிவித்துள்ளது.

2012ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கு ரஷ்யா விருப்பம் தெரிவித்துள்ளதுடன் அதைச் சாதிக்கும் முயற்சியையும் தொடங்கிவிட்டது. இந்தத் தகவலை ரஷ்ய தொலைக்காட்சி அந்த நாட்டு நடிகை ஜூலியா மூலம் வெளியிட்டது.

# திட்டமிட்டபடி புதுடெல்கியில் கிரிக்கெட் போட்டி நடைபெறும்

## கிரிக்கெட் சங்கம் அறிவிப்பு

(புதுடெல்கி)

திட்டமிட்டபடியே இந்திய–பாகிஸ்தான் ஒருநாள் கிரிக்கெட் போட்டி டெல்கி பெரோஸ்ஷா கோட்லா மைதானத்தில் ஏப்ரல் 9ஆம் திகதி நடைபெறும் என்று டெல்கி மற்றும் மாவட்ட கிரிக்கெட் சபை துணைத் தலைவர் சி.கே.கன்னா உறுதிபடக் கூறியுள்ளார்.

டெல்கியில் திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய கன்னா மேலும் கூறியதாவது –

மைதானத்தை சேதப்படுத்தப்போவதாக சிவசேனா அச்சுறுத்தல் விடுத்துள்ளதையடுத்து, மைதானத்துக்கு உள்ளேயும் வெளியேயும் பாதுகாப்பு தீவிரமாகப் பலப்படுத்தப்பட்டுள்ளது.


இந்தப் போட்டியை வேறு மாநிலத்துக்கு மாற்றும் முயற்சிக்கு ஒருபோதும் இணங்கமாட்டோம். இது தொடர்பாக இதர கிரிக்கெட் சங்கங்கள் முயற்சி மேற்கொண்டாலும் அது பலிக்காது.

கிரிக்கெட் ஆடுகளம் மற்றும் ஸ்ரேடியத்தின் கட்டுமானப் பணிகளைச் சீர்குலைக்க எவ்வித முயற்சி மேற்கொள்ளப்பட்டாலும், அதை முறியடிப்போம். டெல்கி பொலிஸாருடன் அடிக்கடி தொடர்புகொண்டு வருகிறோம். அவர்களும் எமக்குப் போதிய பாதுகாப்பு வசதிகளைச் செய்துதருவதாக உறுதியளித்துள்ளனரெனத் தெரிவித்தார்.

கடந்தவாரம் பஞ்சாப் மாநிலத்தில் உள்ள பஞ்சாப் கிரிக்கெட் சங்கத்தின் மொஹாலி கிரிக்கெட் மைதானத்தைச் சேதப்படுத்த முயன்ற சிவசேனா தொண்டர்களின் முயற்சி தோல்வியடைந்தது. அதைத் தொடர்ந்து கான்பூர், டெல்கி மைதானங்களையும் சேதப்படுத்தப் போவதாக அவர்கள் அச்சுறுத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானுடனான தொடர் பெரும்சவாலாக இருக்காது!

## இந்திய கப்டன் கங்கூலி தெரிவிப்பு



(மும்பை)

பாகிஸ்தான் தொடர் மிகப் பெரிய சவாலாக இருக்காது என்று இந்திய அணியின் கப்டன் கங்கூலி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில் –

அவுஸ்ரேலியா, பாகிஸ்தான் சுற்றுப் பயணங்களில் இந்திய அணி மோசமாக விளையாடியிருந்தால் எனது கப்டன் பதவி பறிபோய் இருக்கும். உலகக்கிண்ணம் மற்றும் அதைத் தொடர்ந்து நடந்த அவுஸ்ரேலியத் தொடர், பாகிஸ்தான் தொடர் முக்கியமாக இருந்தது. இதில் சிறப்பாக ஆடிவிட்டோம்.

பாகிஸ்தானுக்கு எதிரான தொடர் இந்தியாவுக்கு மிகப் பெரிய சவாலாக இருக்காது என்றே கருதுகின்றேன். டெண்டுல்கரின் காயம் குறித்து அணியின் டாக்டரே கருத்துக் கூறமுடியும். அவரது காயம் இந்திய அணிக்கு சிறிது பின்னடைவை ஏற்படுத்தலாம்.

லக்ஸ்மன் மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரர். அவர் ஒருநாள் போட்டிக்கான அணியில் தொடர்ந்து நீடிப்பாரா? மாட்டாரா? என்பதை தேர்வுக் குழுதான் முடிவு செய்யுமென கங்கூலி கூறினார்.

இதேவேளை இந்தியா – பாகிஸ்தான் தொடரில் இந்திய சுழற்பந்து வீச்சாளர்களின் ஆதிக்கத்துக்கு பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர்கள் பணிந்துவிடுவார்கள் என்று அந்நாட்டு முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சர்பிராஸ் நவாஸ் கூறியுள்ளார்.

ஷேவாக், டெண்டுல்கர் ஆட்டத்தால் டெஸ்ட் 3 தினங்களிலேயே முடிந்துவிடும். பாகிஸ்தான் அணியில் கனேரியா மட்டுமே சுழற்பந்து வீச்சாளராக உள்ளார். மற்ற 2 சுழற்பந்து வீச்சாளர்கள்மீது பந்தை எறிவதாகப் புகார் கூறப்பட்டுள்ளது. சொகைப் அக்தரும் இடம்பெறாத பட்சத்தில் இந்தியா 3–0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றும். கப்டன் இன்சமாம் ஆடுகளத்தில் சாதிக்கமாட்டார். இந்திய விளம்பரத்தில் நடிப்பதன் மூலம் அவர் சாதிக்க முயல்வாரென, நவாஸ் மேலும் தெரிவித்தார்.

# சர்வதேச கிரிக்கெட் தரவரிசையில் தென்னாபிரிக்கா முன்னேறியது!

சர்வதேச கிரிக்கெட் சபை – ஒருநாள் போட்டியின் அடிப்படையில் நாடுகளின் வரிசைப்பட்டியலை வெளியிட்டுள்ளது. இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரை தென்னாபிரிக்கா 4–1என்ற கணக்கில் கைப்பற்றியதால் 7ஆவது இடத்திலிருந்து 5ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. அந்த அணி 101 புள்ளிகளில் இருந்து 106 புள்ளிக்கு முன்னேறியது.

இங்கிலாந்து அணி 4ஆவது இடத்திலிருந்து ஏழாவது இடத்துக்குப் பின்தங்கியுள்ளது. அந்த அணிக்கு 103 புள்ளிகள் கிடைத்துள்ளன.


அவுஸ்ரேலியா 137 புள்ளிகளைப் பெற்று தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது. நியூஸிலாந்து 120 புள்ளிகளைப் பெற்று 2ஆவது இடத்திலும், இலங்கை 117 புள்ளிகள் பெற்று 3ஆவது இடத்திலும் உள்ளன. பாகிஸ்தான் (109) 4ஆவது இடத்திலும், மேற்கிந்தியத் தீவுகள் (105) 6ஆவது இடத்திலும் உள்ளன.

இந்திய அணி சமீபகாலமாக ஒருநாள் போட்டிகளில் ஆடாததால் 98 புள்ளிகளைப் பெற்று 8ஆவது இடத்தில் உள்ளது. சிம்பாப்வே (51) 9ஆவது இடத்திலும், கென்யா (26) 10ஆவது இடத்திலும், பங்களாதேஷ் (11) கடைசி இடத்திலுமுள்ளன.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க வீரர் கலிஸ் முதலிடத்தை இழந்தார். மேற்கிந்தியத் தீவுகள் வீரர் சர்வான் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

பந்துவீச்சில் மக்ரா (அவுஸ்ரேலியா) முதலிடத்திலுள்ளார். பொலக் (தென்னாபிரிக்கா) 2ஆவது இடத்திலுள்ளார்.

வினாக்களிலுள்ள விடயங்களுக்கேற்ற சரியான விடையின் கீழ் கீறிடுக
இப்பையன் வடக்கு நோக்கிச் செல்கிறான். அவனின் நிழலின் நீளத்துக்கு ஏற்ப இப்போது நேரம்

18. 


1) காலை 8 மணியாக இருக்கக்கூடும்
2) காலை 10 மணியாக இருக்கக்கூடும்
3) பகல் 1 மணியாக இருக்கக்கூடும்
4) பிற்பகல் 3 மணியாக இருக்கக்கூடும்

19. பௌர்ணமி தினமானது மாதத்தில் 20 ஆம் திகதி யன்று வந்ததெனில் படத்திலுள்ளபடி சந்திரன் காணப்படும் தினம்



1) 4 ஆம் திகதியாகும்
2) 8 ஆம் திகதியாகும்
3) 12 ஆம் திகதியாகும்
4) 16 ஆம் திகதியாகும்

20. படத்தில் காணப்படும் நிகழ்ச்சிகளைப் பெரும்பாலும் இலங்கையில் எந்த மாதத்தில் காணமுடியும்




1) ஜனவரி மாதத்தில் ஆகும்
2) ஏப்ரல் மாதத்தில் ஆகும்
3) ஓகஸ்ட் மாதத்தில் ஆகும்
4) டிசம்பர் மாதத்தில் ஆகும்


21. தானியங்கள் நிரப்பப்பட்ட பாத்திரங்கள் சில இங்கு காட்டப்பட்டுள்ளன
A தொகுதியிலுள்ள பாத்திரங்களிலா அல்லது B தொகுதியிலுள்ள பாத்திரங்களிலா
தானியங்கள் அதிகமாக உள்ளன சரியான விடையின் கீழ் கோடிடுக




A B

கீழ்வரும் வினாக்களில் உள்ள பெட்டியின் ஆறு பக்கங்களிலும் படங்கள் வரையப்பட்டுள்ளன. நீங்கள் காணும் பக்கத்தினது எதிர்ப்பக்கத்தில் இருப்பதும் அதே படமாகும். பெட்டியைப் பிரித்து விரித்து வைக்கும் போது, அதனைத் திருத்தமாகக் காட்டும் முறையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

22. 


23. 

24. பல்வேறு நிறங்கள் தீட்டப்பட்ட மரச்சதுரமுகி ஒன்றின் இரு நிலைகள் கீழே தரப்பட்டுள்ளன.
இந்தச் சதுரமுகியில் மஞ்சள் நிறம் பூசப்பட்ட பக்கத்துக்கு எதிரான பக்கத்தின் நிறம் யாது?




1. நீலம் 2. ஊதா 3. மஞ்சள்

25. சதுர வடிவக் கடதாசி ஒன்றை நான்காக மடித்து அதன் ஒரு பக்கத்தின் வழியே ஒரு சிறுமுக்கோணப்பகுதி வெட்டி எடுக்கப்பட்டுள்ள விதத்தை உரு காட்டுகிறது. கடதாசி விரிக்கப்படும்பொழுது பெறும் வடிவத்தைக் காட்டும் படத்தை தரப்பட்டுள்ள ஏனைய நான்கு உருக்களிலிருந்தும் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.




26. கூட்டினுள் தரப்பட்ட வடிவங்களை அவதானியுங்கள். அங்கு உள்ள எல்லா வடிவங்களையும் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.



கீழே உள்ள கூட்டினுள் காணப்படுவது தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் திறமைச் சித்திபெற்ற மாணவனுக்கு வழங்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அன்பளிப்புப் பொதி வைக்கப்பட்டிருந்த முறையாகும். இந்தப் பொதியை வைக்கக்கூடிய வேறு இரு முறைகள் கீழுள்ள இரு வினாக்களில் காட்டப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்துச் சரியான விடைக்கு உரிய இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.



27.



1 2 3 (........)



1 2 3 (........)

க.கலாமோகன்





# மாணவர் மலர்

## மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும், உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் - 2005

1. பின்வரும் பாடலை வாசித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக

குண்டு குண்டாய் நண்பனுடைய
விலாசம் எழுதுவேன்
குறைவில்லாமல் அஞ்சல் தலையை
உறைமேல் ஒட்டுவேன்

அஞ்சல் பெட்டி வாய்க்குள் போட்டு
வீடு திரும்புவேன்
அருமை நண்பன் பதிலைக் காண
ஆவல் கொள்ளுவேன்

1) இந்தப் பாடலைப் பாடியவர் யார்?
......................................................

2) முதலாம் பாடலில் உள்ள அடுக்குத் தொடர் யாது?
......................................................

3) நண்பன் என்பதற்கு எதிர்ச்சொல் தருக?
......................................................

4) வீடு என்பதற்கு ஒத்தசொல் இரண்டு தருக?
1. ........................ 2. ........................

5) முதலாம் பாடலில் உள்ள பெயர்ச்சொல் இரண்டு தருக
1. ........................ 2. ........................

6) இரண்டாம் பாடலில் உள்ள வினைச்சொல் இரண்டு தருக.
1. ........................ 2. ........................

7) குறைவில்லாமல் என்பதைப் பிரித்து எழுதுக?
......................................................

8) எழுதுவேன் என்பதன் இறந்தகால வடிவம் யாது?
......................................................

9) அஞ்சல் பெட்டிக்குள் போட்டு வீடு திரும்புவேன் என்ற வாக்கியத்தின் எழுவாய் எது?
......................................................

10) எதைக் காண ஆவல் கொள்ளுவேன்?
......................................................

2. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக்குக.
1) ஒரு/ வந்தனர்/ பேரனும்/ அக்கிராமத்தில்/ வசித்து/ தாத்தாவும்
......................................................
2) விரும்பி/ ஒருபானம்/ தேநீர் / பலரால் / அருந்தப்படும் / உலகில்
......................................................

3. பின்வரும் வாக்கியங்களைப் பால் மாற்றி எழுதுக.
1) உழவன் தோட்டத்துக்கு மரக்கறிகள் பிடுங்கச் சென்றான்
......................................................


2) சின்னம்மா வீட்டில் இன்று திருமணம் நடைபெற்றது
......................................................


4. பின்வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் பொருத்தமான சிங்களச் சொல்லை (சிங்கள மொழியில்) எழுதுக.
1) வணக்கம் ................ 2) ஐந்து ................
3) தங்கை ................ 4) பேனை ................

5. பின்வருவனவற்றுள் ஒவ்வொரு சொல்லுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை (ஆங்கில மொழியில்) எழுதுக.
1) வெண்கட்டி ................ 2) ஆசிரியர் ................
3) சந்தை ................ 4) தோடம்பழம் ................

6. சரியான விடையின் கீழே கோடிடுக
1) தரை மேலான வித்து முளைத்தலுக்கு ஓர் உதாரணம்
(1) பயறு (2) நெல் (3) சோளம் (4) குரக்கன்
2) சுவையற்ற பாலைக் கொண்டிருக்கும் தாவரம்
(1) நாகதாளி (2) கள்ளி (3) றோசா (4) குரக்கன்
3) நீரில் மிதக்கும் தாவரங்களில் ஒன்று
(1) ஐதரில்லா (2) தாமரை (3) கடற்தாமரை (4) அல்லி
4) தமிழிலுள்ள மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை
(1) 12 (2) 30 (3) 247 (4) 18
5) எண்பதாவது ஆண்டு விழா
(1) அமுதவிழா (2) வெள்ளிவிழா (3) பொன்விழா (4) வைரவிழா
6) எட்டாவது முக்கோண எண் எது?
(1) 8 (2) 36 (3) 15 (4) 21
7) வரண்ட நிலத் தாவரம் எது?
(1) தேயிலை (2) வாழை (3) நாகதாளி (4) நெல்
8) கூடுகட்டத் தெரியாத பறவை.
(1) சிலந்தி (2) தூக்கணாங்குருவி
(3) காகம் (4) குயில்
9) பறவைகள் பறப்பதற்கு உதவுவன.
(1) சிறகுகள் (2) கால்கள் (3) அலகுகள் (4) விரல்கள்
10) பழக்கடைகளில் அதிகம் காணப்படுவன
(1) விளம்பரங்கள் (2) பழவகைகள்
(3) மரக்கறிகள் (4) மீன்வகைகள்

7. பின்வரும் படங்களின் பெயர்களை எழுதுக.

1)  2) 

3)  4) 

8. இடைவெளியைப் பொருத்தமான சொல் கொண்டு நிரப்புக

( வினாவிசைக்குறி, எழுநூற்றம்பது, பாகற்காய், கறுப்பு, அளவுநாடா, ஈருடக சுருள், இரேகையை, இருநூற்று நாற்பத்தேழு, நான்கு)

(1) தமிழ் மொழியில் .......................... எழுத்துக்கள் உள்ளன.
(2) பாவற்காய் என்பதன் திருந்திய வடிவம் ......... ஆகும்.
(3) வினாவாக்கியத்தின் இறுதியில் இடப்படும் குறியீடு .................. ஆகும்.
(4) ஓர் எண்ணை 3 ஆல் பெருக்கி 3 ஆல் கூட்ட 15 ஆகியது அவ்வெண் .......................... ஆகும்.
(5) ஒரு போத்தலின் கொள்ளளவு .................. ... மில்லி லீற்றர் ஆகும்.
(6) தவளை ஒரு .......................... வாழ்வுப் பிராணி ஆகும்.
(7) துக்கத்தைக் குறிப்பதற்கு .......................... நிறம் பாவிப்பார்கள்.
(8) என்பது .......................... குறிக்கும்.
(9) உடைகளைத் தைப்பதற்கு அளவு எடுப்பதற்கு .................. மிகவும் ஏற்றது.
10) .......................... மட்டையைப் பாவித்து விளையாடும் விளையாட்டுக்களில் ஒன்றாகும்.

9. பின்வரும் உரைப்பகுதியைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.

பரதன் என்னும் பாத்திரம் இராமாயணத்தில் இடம் பெறும் ஒரு சிறந்த கதாபாத்திரமாகும்.

இராமாணம் ஒரு தலைசிறந்த காவியமாகும். கம்பரால் இயற்றப்பட்டதால் கம்பராமாயணம் என அழைக்கப்படும் கம்பராமாயணம் ஆறு காண்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

இது வடமொழியிலுள்ள வான்மீகி இராமாயணத்தைத் தழுவி இயற்றப்பட்டது என்பர்.

(1) இராமாயனத்தில் இடம்பெறும் சிறந்த கதாபாத்திரம் எது? ..........................
(2) தலைசிறந்த காவியம் எது?
..........................
3) கம்பரால் இயற்றப்பட்ட நூல் எது?
..........................
4) கம்பராமாயணம் எத்தனை காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது?
..........................
5) வடமொழியில் உள்ள இராமாயணம் எது?
..........................

10) பின்வரும் குறுக்கெழுத்தைப் பூர்த்தி செய்க?

இடமிருந்து வலம்
1. நாங்கள் என்பதன் ஒருமை
2. வயலில் அரிவாள் கொண்டு வெட்டுவது
4. காரம் மிக்கது
5. கண்ணைக் குறிக்கும் சொல்
6. இதைக் கண்டால் பிணமும் வாய் திறக்கும்
7. கண்ணகி அணிந்த அணிகள்
9. அவள் என்பதன் எதிர்ப்பாற் சொல்
10. மஞ்சள் என்பதைக் குறிக்கும் சொல்
11. இல்லை என்பதை மறுத்தல்
12. குழந்தைகளுக்குப் பெரிதும் தேவைப்படுவது

மேலிருந்து கீழே
1. நன்றியுள்ள மிருகம்
3. இல்லாமற் செய்
6. சத்துணவை உண்டால் கிடைப்பது
7. இது கோபத்தைக் குறிக்கும்
8. இதனைப் பெண் என்பர்
9. தாய் என்பதன் ஒத்தசொல்
10. கிழமைகளுள் ஒன்று
11. ஒருவகை மரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 நா | | | 2 அ | | வி | | 3 அ |
| | | 4 மி | | கு | | 5 வி | |
| | | | 6 ப | | | | |
| | | 7 சி | | ம் | | | 8 க |
| | | | | | 9 அ | | |
| 10 ச | | ம் | | 11 ஆ | | | னி |
| | | | 12 பா | | மா | | |

11. கீழே தரப்பட்டுள்ள எண்கள் மூன்றையும் நன்கு அவதானித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக

4305 68324 831

1) முக்கோணத்தில் உள்ள எண்ணைச் சொற்களில் எழுதுக?
..........................
2) நீள் வட்டத்திலுள்ள எண்ணின் 8 இன் இடப் பெறுமானம் யாது? ..........................
3) இம்மூன்று எண்களையும் இறங்கு வரிசைப் படுத்தினால் நடுவில் வரும் எண் யாது?
..........................
4) இம்மூன்று எண்களினதும் கூட்டுத் தொகை யாது?
..........................
5) இரண்டால் வகுக்கும் போது மீதி வராத எண் இவற்றுள் எது? ..........................

12. பின்வரும் கதைப்பகுதியைப் பூரணப்படுத்துக ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்கு குறையாது பொருத்தமான எழுவாய், பயனிலையுடன் இருத்தல் வேண்டும்.


நான் மாலை வேளை எனது வீட்டிற்கு அருகிலுள்ள கடைக்கு பொருட்கள் வாங்கச் சென்றேன். எனக்கு அம்மா பொருட்கள் வாங்குவதற்காக ஆயிரம் ரூபா காசுத்தாளை அம்மா தந்தார். கடைக்காரர் மீதிப் பணமாக இருநூற்றி முப்பது தரவேண்டியவர் தவறுதலாக எழுநூற்றி முப்பதை தந்து விட்டார்.


.......................................... கதையை முடிக்குக


T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp.Trd
ஆசிரிய ஆலோசகர் மேல்மாகாணம்





01 தொடக்கம் 05 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் நான்கு படங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று ஏனைய படங்களுடன் பொருத்தமற்றதாகக் காணப்படுகிறது. அதன் கீழ் கோடிடுக.

01. 
1. 2. 3. 4.

02. 
1. 2. 3. 4.


03. 
1. 2. 3. 4.

04. 
1. 2. 3. 4.

05. 
1. 2. 3. 4.

கீழே தரப்படும் வினாக்களுக்குப் பொருத்தமான படங்களின் கீழ் கீறிடுக.

06. ஒரு பிள்ளை பட்டம் ஒன்றைச் செய்து பறக்கவிடும்போது, நூல் அறுந்து பட்டம் காற்றில் இழுத்துச் செல்லப்படும் முறையினைக் காட்டும் ஐந்து சந்தர்ப்பங்களின் படங்கள் இங்கு காட்டப்பட்டுள்ளன. இந்த ஐந்து சந்தர்ப்பங்களையும் ஒழுங்குமுறைப்படி காட்டும் விடையாது?



1) 3,4,2,1,5 2)4,2,1,5,3 3)2,5,1,3,4

07. மாணவன் ஒருவன் காலையில் எழுந்து கால் முகம் கழுவி ஆயத்தமாகி பாடசாலைசென்று வகுப்பறையில் படிக்கும் விதத்தினைக் காட்டும் ஐந்து சந்தர்ப்பங்களின் படங்கள் இங்கு காட்டப்பட்டுள்ளன. இந்த ஐந்து சந்தர்ப்பங்களையும் ஒழுங்குமுறைப்படி காட்டும் விடை எது?



1) 2,5,3,4,1 2) 2,4,1,3,5 3)4, 3,5,1,2


08. கிரிக்கெட் விளையாட்டு ஆரம்பிக்கும்போது பந்தை எறிந்து வீரர் ஒருவர். பந்தைப் பிடிக்கும் விதத்தை எடுத்துக்காட்டும் ஐந்து சந்தர்ப்பங்களின் படங்கள் இங்கு காட்டப்பட்டுள்ளன. இந்த ஐந்து சந்தர்ப்பங்களையும் ஒழுங்குமுறைப்படி காட்டும் விடை யாது?




1) 4,2,3,5,1 2) 2,1,3,5,4 3)3,1,5,2,4

கீழுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களுக்கு மிகப் பொருத்தமான உரு யாது?


09. அழகு - மென்மை - சுவை




10. பாயக் கூடியது - ஓடக் கூடியது - மிதக்கக் கூடியது




11 ஆம் 12 ஆம் வினாக்களுக்கு ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்ட உருவங்களுடன் மிகநெருங்கிய தொடர்புடைய விடையின் கீழ் கீறிடுக.

11. 
1) பறவைகள், வியாபாரிகள், மருந்து
2) விலங்கு, நிழல், மரப்பலகை
3) மரப்பலகை, மருந்து, உணவு

12. 


1) வியாபாரி, அதிபர், பெற்றோர்,
2) கடதாசி, தொழிற்சாலைகள், விளையாட்டு
3) கற்றல், மாணவர், ஆசிரியர்


13 ஆம் 14 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள உருவத்துக்கு மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக.


13. 
1) நீர் 2) ஆறு 3) மழை (.........)

14. 
1) வெயில் 2) குளிர் 3) மழை (.........)

வினாக்களிலுள்ள படங்களில் காணப்படுகின்றவற்றைச் சரியாகக் குறிப்பிடுகின்ற வாக்கியத்தின் கீழ் கோடிடுக.

15. 
1) சிறிய பிள்ளைகள் பெரிய பிள்ளைகளை விட்ப் பொறுப்புடன் வேலை செய்கிறார்கள்.
2. பிள்ளைகள் பாடசாலை வளவில் ஏதோ வேலையில் ஈடுபட்டுள்ளார்கள்.
3. ஆசிரியை ஒருவர் பிள்ளைகளுக்கு தமிழ்ப் பாடம் சொல்லித் தருகின்றார்.

16. 
1. பிள்ளையொன்று பரீட்சைக்காக படிக்கின்றது.
2. பிள்ளையொன்று ஏதோவேலையில் ஈடுபட்டுள்ளது.
3. பிள்ளையொன்று இரவு நேரத்தில் படித்துக் கொண்டிருக்கிறது.

17. 
1. இது மாலை நேரம்
2. இது காலை நேரம்
3. இது பூக்கள் நிறைந்த குளமாகும்

# வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தோரை வளலாய் வடக்கில் குடியமர்த்துக!

## அரச அதிபரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேச செயலக பிரிவில் இருந்து 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து, யாழ். குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலுள்ள நலன்புரி நிலையங்களிலும், உறவினர் வீடுகளிலும் வசித்துவரும் - பலாலி, மயிலிட்டி, வளலாய், தையிட்டி, ஊறணி, காங்கேசன்துறை, வலித்தூண்டல் பகுதிகளில் வசிக்கும் மக்கள் தம்மைக் கடற்கரையோரமாக வளலாய் கிராமத்தில் குடியிருப்புகள் அமைத்துக் குடியமர அனுமதிக்குமாறு யாழ். அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொலிகண்டி தொடக்கம் பருத்தித்துறை வரையுள்ள கடற்கரையோரக் கிராமங்களில் நலன்புரி நிலையங்களில் தற்காலிக குடியிருப்புகள் மற்றும் உறவினர் வீடுகளில் வாழ்ந்த மக்கள் வெகு சிரமங்களுக்கு மத்தியிலேயே கடற்தொழில் செய்துவந்தனர்.

அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக இவர்கள் வாழ்விடங்கள், கடற்தொழில் உபகரணங்களை முற்றாக இழந்துள்ளனர்.

இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்கள் தற்காலிக கூடாரங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இங்கு மலசலகூடம் மற்றும் குடிநீர் வசதிகள் இல்லை. முன்னரைப்போல் கடற்தொழில் செய்யமுடியாதுள்ளது.

இவைகளைக் கருத்திற்கொண்டு இடம்பெயர்ந்த மக்கள் அனைவரையும் வளலாய் வடக்கு கிராமத்தில் குடியமர்த்த யாழ். அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென வலிகாமம் வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(21)

# புலிகள் பற்றிய விபரங்களை திரட்டுகின்ற படையினர்!

(அளவெட்டி)

புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னர் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்தவர்களுடைய விபரங்களை இராணுவத்தினர் சேகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் அளவெட்டிப் பகுதியில் இராணுவத்தினர் இந்தத் தகவல்களைத் திரட்டும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

விடுதலைப் புலிப் போராளிகளுடைய வீடுகளுக்குச் சென்று, அங்கிருக்கும் குடும்ப அங்கத்தவர்களை கடுமையாக விசாரணைக்கு உட்படுத்தியதுடன், அவர்களது பெயர் விபரங்கள், அடையாள அட்டை இலக்கங்கள், ஆள் அடையாளங்கள் என்பவற்றையும் பதிந்து சென்றுள்ளனர்.

இதனால் போராளிகளுடைய பெற்றோர்களும், குடும்ப அங்கத்தவர்களும் அச்சமடைந்துள்ளதுடன், இது தொடர்பாகத் தமது கவலையையும் வெளியிட்டுள்ளனர். புலனாய்வுத் தகவல்கள் எனும் போர்வையில் இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறிய இராணுவத்தினர் 'பயப்பட வேண்டாம்-சண்டை வராது' என்றும் கூறிச் சென்றதாக அவர்கள் தெரிவித்தனர்.

(94)

# நீண்டகாலமாக நிரப்பப்படாத கடலக பொறியியலாளர் பதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த பல ஆண்டுகளாகக் கடலக பொறியியலாளர் பதவி வெற்றிடமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடலக இயந்திரங்கள் மற்றும் படகுகளைப் பார்வையிட்டு, பரிசோதனையின் பின் இயந்திரங்கள், படகுகள் பாவனைக்குப் பயன்படுத்தலாமெனச் சானறிதழ் வழங்கும் பணியைக் கடற்தொழில் நீரியல் வள திணைக்கள கடலக பொறியியலாளரே இதுவரை செய்துவந்தார்.

தற்போது இந்தப் பதவி வெற்றிடம் ஏற்பட்டபின் கடந்த சில வருடங்களாகப் படகுகள், இயந்திரங்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு சான்றிதழ் வழங்கப்படவில்லை.

சுனாமி அனர்த்தத்தின்போது பல ஆயிரக்கணக்கான படகுகள், இயந்திரங்கள் சேதமடைந்துள்ளன. இவைகள் திருத்தியமைக்கப்பட்டபின கடலக பொறியியலாளரின் பரிசோதனை முடிவின் பின்னரே கடற்தொழில் தேவைக்கு, உபயோகத்துக்குப் பயன்படுத்தப்படவேண்டும்.

ஆகவே, கடற்தொழில் நீரியல் வள அமைச்சு யாழ்.மாவட்டத்துக்கு நிரந்தர கடலக பொறியியலாளர் ஒருவரை நியமிக்க உரிய அமைச்சிடம் கோரிக்கை விடுக்கவேண்டுமென கடந்த 8 ஆம் திகதி நடைபெற்ற கடற்தொழில் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

(21)

# 14 மாவீரர்கள் நினைவாக கைதடியில் நினைவுத் தூபி



கைதடிப் பகுதியில் 1986 ஆம் ஆண்டு இடம்பெற்ற எதிர்பாராத வெடிவிபத்தில் வீரச்சாவடைந்த லெப்.கேணல் பொன்னம்மான் உள்ளிட்ட 14 போராளிகள் பொதுமக்களின் நினைவாக கைதடி மத்தியில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபி திறப்புவிழா நேற்றுமுன்தினம் மாலை 5.00 மணிக்கு நடைபெற்றது.

தென்மராட்சி கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச் சுடரை யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் கண்ணன் ஏற்றி வைத்தார்.

தேசியக் கொடியை யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன் ஏற்ற, நினைவுத் தூபியை நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசன் திரைநீக்கம் செய்தார். எதிர்பாராத விபத்தின்போது உயிரிழந்த மாவீரர், பொது மக்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபிக்கு சமீபமாக முன்பள்ளி அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பத்மினி சிதம்பரநாதன், சிவனேசன், என்.ரவிராஜ் மற்றும் தென்மராட்சி கோட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் அலைவாணி ஆகியோர் கட்டடத்துக்கான அடிக்கல்லை நாட்டினர்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து இந்தச் சம்பவம் நடைபெற்ற 19 ஆம் ஆண்டு நினைவு நாள் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

தென்மராட்சி கோட்ட பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான பத்மினி சிதம்பரநாதன், ரவிராஜ் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

(34)

# சமைத்த உணவு வழங்கல் கடந்த வாரத்துடன் நிறுத்தம்

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு சமைத்த உணவுகள் வழங்குதல் கடந்தவாரம் முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

சொந்த வீடுகள், உறவினர் வீடுகள், நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்டமாக சகல குடும்பங்களுக்கும் சமையல் பாத்திரங்கள் வாங்குவதற்கென 2 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

(21)

## கட்டைவேலி கூட்டுறவுச் சங்க நிர்வாகத் தெரிவு

(நெல்லியடி)

கட்டைவேலி ப.நோ.கூ.சங்கத்தின் 2005 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு கடந்த வாரம் கட்டைவேலி ப.நோ. கூ.சங்கத்தின் தலைமைக் காரியாலய அபிவிருத்தி உத்தியோகத்தர் கணேஸ் தலைமையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக த.சிதம்பரப்பிள்ளையும், உப தலைவராக செ. சதானந்தனும், இயக்குநர்களாக இ.இரவீந்திரன், சி.வீரசிங்கம், ச.இராகவன், மா.பிரபாகரன், ஆ.சாந்தகுமாரி ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

(12)

# உதவி செய்வதாகக் கூறி கைப்பையுடன் நழுவிய பெண்

(யாழ்ப்பாணம்)

உதவி செய்வதாகக்கூறி பெண்மணி ஒருவர் பணப்பையுடன் மாயமாகத் தப்பிச்சென்றுள்ளார். இந்தச் சம்பவம் கடந்த வாரம் தனியார் போக்குவரத்துப் பயணிகள் பஸ்ஸிலேயே இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

கோண்டாவில் டிப்போ பகுதியிலிருந்து யாழ்.நகருக்குச் செல்வதற்காகக் கைக்குழந்தையுடன் இளம் பெண் ஒருவர் ஏறி இருந்தார். அப்போது வாகனத்தில் நெரிசல் அதிகமாகக் காணப்பட்டது.

அருகில் ஆசனத்தில் அமர்ந்திருந்த இன்னொரு பெண் கைக்குழந்தையுடன் இருந்த பெண்ணுக்கு உதவுவதாக அவருடைய கைப்பையை வைத்திருந்தார்.

சிறிது நேரத்தில் பஸ் தரிப்பிடம் ஒன்றில் பஸ் நின்றபோது கைப்பையுடன் அந்தப் பெண் இறங்கிச் சென்றுவிட்டார். கைப்பையினுள் ஒருதொகைப்பணமும் முக்கிய ஆவணங்களும் இருந்ததாகப் பறிகொடுத்த பெண் தெரிவித்தார்.

# இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை

வடமராட்சி வடக்கு கரையோரப் பிரதேசத்தில் தொண்டமானாறு முதல் கற்கோவளம் வரையான பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்த மக்களில் பெரும்பாலானோர் தமது வீடுகளிலும், வீடுகளை இழந்தவர்கள் தமது வீடுகளுக்கு அருகில் குடிசைகள், கூடாரங்கள் அமைக்கப்பட்டு மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை மணற்காடு கிராமம் முற்றாக அழிவடைந்த நிலையில் அந்தப் பிரதேச மக்கள் எவரும் அந்தக் கிராமத்தில் சென்று குடியமரவில்லை.

தற்போது குடத்தனை அரசினர் தமிழ்க கலவன் பாடசாலை, புலோலி மெதடிஸ்த மிசன் பாடசாலை, கற்கோவளம் புனித செபஸ்ரியான் தேவாலயம், தும்பளை லூர்து மாதா தேவாலயம், பருத்தித்துறை புனித அந்தோனியார் தேவாலயம், வல்வெட்டித்துறை தனியார் காணி ஒன்றுமே தற்போது இடைத்தங்கல் முகாம்களாகச் செயற்பட்டுவருகின்றன.

இதேவேளை குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, புலோலி மெதடிஸ்த மிசன் பாடசாலைகள் இயங்கிவருகின்ற நிலையில் பாடசாலை வளவுகளுள் அமைக்கப்பட்டுள்ள கூடாரங்களில் இடம்பெயர்ந்த மக்கள் அங்கு தங்கியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இடம்பெயர்ந்த மக்கள் அனைவரையும் 3 ஆம் கட்ட நடவடிக்கையாகச் சொந்தப் பிரதேசங்களில் குடியமர்த்தவும் வீடுகளை இழந்தோருக்கு உதவி வழங்கும் நிறுவனங்களூடாக வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்குமான நடவடிக்கைகளை துரிதகதியில் மேற்கொண்டு வருவதாக வடமராட்சி சுனாமி அனர்த்தக் கூட்டுச் செயலணியும், வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சங்க சமாசமும் தெரிவித்துள்ளன.

(14)

# முன்பள்ளி மாணவர்களுக்கு சத்துணவு வழங்கல்

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கான போஷாக்கு உணவு வழங்கும் திட்டத்தை வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் வல்வெட்டித்துறையில் ஆரம்பித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் வல்வெட்டித்துறையில் இயங்கும் விக்னேஸ்வரா பாலர் பாலர் பாடசாலை, மற்றும கணபதி பாலர் பூங்கா ஆகியவற்றில் கல்வி கற்கும் 176 சிறுவர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்துக்கு வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

நான்காவது அகவையில்



பெயர் : உ.திவாகரன்
முகவரி : வட்டக்கச்சி

ஐந்தாவது அகவையில்



பெயர் : நி.நிருஷா
முகவரி : யாழ்ப்பாணம்


# அளவெட்டி சித்தியம்புளியடி பகுதியில் சட்டவிரோத மதுபான விற்பனை!

அளவெட்டி சித்தியம்புளியடிப் பகுதியில் சட்டவிரோதமான முறையல் இடம்பெறும் மதுபான விற்பனையால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதியில் சீவல் தொழிலில் ஈடுபடும் சில தொழிலாளர்கள் மதுபான விற்பனை நிலையங்களினூடாக மதுவை விற்பனை செய்யாமல், தாமாகவே பனங் காணிகளினுள் வைத்து விற்பனை செய்து வருகின்றனர்.

இத்துடன் சட்டவிரோதமான முறையிலே கசிப்பு மற்றும் சாராயம் போன்ற மதுபான வகைகளையும் விற்பனை செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. மதுபானப் பாவனையாளர்களிடையே குழு மோதல்களும் இடம்பெற்று வருவதால், பொது மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதியில் அரச அனுமதிபெற்ற மதுபான விற்பனை நிலையமொன்று இயங்கிவருகின்ற போதும், சட்டவிரோதமான முறையிலே மதுபான விற்பனை நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(94)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்றுவந்த யோகாசன தியானப் பயிற்சி வகுப்புக்களை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு - எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 3 மணிக்கு நாவலர் மணடபத்தில் நடைபெறவுள்ளது.

சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பேராசிரியர் தயா சோமசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

# வெலிக்கந்த தாக்குதல் சம்பவத்துக்கு முல்லை.பொது அமைப்புக்கள் கண்டனம்

(முல்லைத்தீவு)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள் மற்றும் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் அரியநாயகம் சந்திரநேரு ஆகியோர் வெலிக்கந்த பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை முல்லைத்தீவு மாவட்ட பொது அமைப்புகள் கண்டித்துள்ளன.

**முல்லைத்தீவு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம்**

தமிழீழ வரலாற்றின் சமாதான யுகம் கறைபடியும் யுகமாக மாறி வருகிறது. நாம் சமாதானத்தை




விரும்பினோம். உலக நாடுகளின் ஆசிகளையும், ஆலோசனைகளையும் பெற்றோம். இதனால் போரை நிறுத்தி சமாதானத்தைப் பூரணமாகக் கடைபிடித்துவரும் இந்த வேளையில், அரசு எங்கள் போராளிகளை கொன்றுகுவித்து வருவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

அத்தனைக்கும் உச்சக்கட்டமாக கடந்த 7 ஆம் திகதியன்று நடைபெற்ற மட்டு.அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் மற்றும் போராளிகள் மூவர், மாமனிதர் சந்திரநேரு ஆகிய ஐவரையும் அரசு திட்டமிட்டுக் கொலை செய்துள்ளது. இதைக் கண்டு பொங்கியெழுந்த முல்லைத்தீவு வாழ் மக்களின் உணர்வுகளை முல்லைத்தீவு மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் ஒன்றுகூடி தங்களுக்கு அறியத்தருகிறது.

எங்கள் தேசத்தை விட்டுப் பிரிந்த லெப்.கேணல் கௌசல்யன் தேசியத் தலைவரால் பேச்சுவார்த்தைக்கான உறுப்பினராகத் தெரிவு செயயப்பட்ட ஒருவராவார்.

அதனால் எங்கள் இனத்தின் இறைமை, உரிமைகளை மேற்குலகின் பல நாடுகளுக்குச் சென்று பேசித தீர்வுக்கு உழைத்து வந்தார். அவரும், அவரது சகாக்களும் சுனாமியால் பாதிப்புற்ற மக்களின் மறுவாழ்வுக்கு தேசியத் தலைமையுடன் ஆலோசனை பெறச் சென்று வந்தபோ, இந்தக் கொடூரம் நடைபெற்றது.

இயற்கை சீறியதால் உறவுகள் அழிந்த வேளையில், பகையை மறந்து தேசத்தைக் கட்டியெழுப்புவோம் என்று கூறிக்கொண்ட அரசு-அந்தத் தேசத்தைக் கட்டியெழுப்ப அல்லும் பகலும் உழைத்த லெப். கேணல் கௌசல்யன் உட்பட அறுவரையும் கொலை செய்தமை இந்த வேளையிலும் அரசின் கொலை வெறியை உணரவைக்கிறது.

சுனாமி அழிவுக்கு கிடைத்த உதவிகளில் அரசியல் நடாத்தி, இதில் ஆயுதங்களையும் கொள்வனவு செய்யமுயலும் அரசு இந்தக் காலத்திலும் இராணுவ ரீதியில் எமது போராட்டத்தை அழிக்கக் கூர்ப்புப் பெற்றுள்ளது என்பதை இந்தச் சம்பவம் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

இரண்டு இராணுவ முகாம்களுக்கு இடைப்பட்ட பகுதிகளில் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இராணுவ சீருடையில் நின்று எங்கள் போராளிகளை அழித்தவர்கள் வேறுயாருமல்ல இராணுவமே.

இந்த இராணுவ நடவடிக்கையால் நாம் பல போராளிகளை சமாதான காலத்தில் இழந்துவிட்டோம். இறுதியாக கௌசல்யனினதும், ஏனைய போராளிகளினதும் வீரமரணம் "சமாதானத்துக்கே சாவுமணி அடிக்கும் சூழலை ஏற்படுத்தி விட்டது" என்பதை சந்தேகமில்லாது உணருகிறோம். இவ்வாறான எம் போராளிகளை இனியும் நாம் இழக்கத் தயாராக இல்லை. தொடரப் போகும் போருக்கு முழுப் பொறுப்பும் சிங்கள அரசுதான் என்பதை நீங்கள் அறிவீர்கள் என நம்புகிறோம்.

எனவே கௌசல்யன் உள்ளிட்ட அனைவரது கொலைக்குமான காரணங்களைக் கண்டுபிடிக்க வேண்டும். எங்கள் போராளிகளுக்கு நடந்த கடைசி அனர்த்தம் இதுவென உங்களால் உறுதி செய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்வீர்களானால் சாவுமணிக்குப் பதிலாக சமாதான மணி கேட்கும், இல்லையேல் போர்மணி தேசம் முழுவும் ஒலிக்கும் என்ற செய்தியை தங்களுக்கு பணிவுடன் அறியத்தருகிறோம்

என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**முல்லைத்தீவு அன்னையர் முன்னணி**

இயற்கையின் சீற்றத்தால் முற்றாக அழிந்துள்ள வட - கிழக்கு பகுதிகள் அரசினால் புறக்கணிக்கப்பட்டிருந்த வேளையில், அவற்றை மீளக்கட்டியெழுப்புவது சம்பந்தமாக கலந்துரையாடல் ஒன்றில் கலந்துவிட்டு திரும்பிச் சென்று கொண்டிருந்த வேளையில் மட்டக்களப்பு - அம்பாறை அரசியற் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யனும், மாமனிதர் அரியநாயகம் சந்திரநேருவும் போராளிகளும் கொல்லப்பட்ட சம்பவத்தை அன்னையர் முன்னணியினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

சமாதான ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட காலத்திலிருந்து இவ்வாறான பல செயல்களைத் தொடர்ந்து புழி ஓர் இடமும், பாவம் ஓர் இடமுமாக தரையிலும், கடலிலும் சிங்கள அரசும், அதன் கூலிப்படைகளான சிங்கள இராணுவமும் செய்து வந்திருக்கின்றன, செய்தும் வருகின்றன. இவ்வாறான சம்பவங்களால் நாம் எமது பெறுமதிமிக்க பல தளபதிகளையும், போராளிகளையும், நாட்டுப்பற்றாளர்களையும் இழந்து வந்திருக்கிறோம், இழந்தும் வருகின்றோம்.

போராட்ட காலத்தில் நேருக்கு நேர் நின்று போர் செய்யமுடியாது புறமுதுகு காட்டி ஓடியவர்கள் - கோழைத்தனத்தின் உச்ச வெளிப்பாடாகவே நிராயுதபாணிகளான எங்கள் குழந்தைகளைக் கொல்வது அவர்களுடைய கடைந்தெடுத்த கயமைத்தனத்தை மீண்டும் வெளிப்படுத்துகிறது.

இராணுவத்தின் இவ்வாறான பாரிய யுத்தநிறுத்த மீறல் சம்பவங்களில் கடந்த 7 ஆம் திகதியன்று நடந்த சம்பவமே இறுதிச் சம்பவமாக அமைவதோடு, இந்தச் சம்பவம் தொடர்பான தீர்க்கமான முடிவை உடன்தரவேண்டுமெனவும் நாம் வலியுறுத்துகின்றோம்.

மேலும் இவ்வாறான யுத்த நிறுத்த மீறல் சம்பவங்கள் நடைபெறக்கூடாது எனவும், சமாதானம் உறுதிசெய்யப்பட வேண்டும் எனவும் அன்னையர் முன்னணியினராகிய நாம் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த எமது கோரிக்கை நிறைவேற்றப்படாது விட்டால் எமது இனத்தின் எதிர்கால விடிவை உறுதி செய்ய நாமே நமது தேசியத் தலைவரிடம் போருக்கான அழைப்பை விடும்படி கோரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்பதையும் வலியுறுத்துகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



புனரமைக்கப்படாத நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படும் கிளிநொச்சி - இராமநாதபுரம் வீதியைக் காணலாம். (வட்டக்கச்சி செய்தியாளர்)

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

**பெப்ரவரி 16**

1748 :- மின்சார பற்றறியைக் கண்டுபிடித்த இத்தாலி நாட்டைச் சேர்ந்த வோல்டா பிறந்த தினம்.

1865 :- இங்கிலாந்தின் வின்சர் அரண்மனையில் பாரிய தீ விபத்து ஏற்பட்டது.

1917 :- தென்னாபிரிக்காவில் நாடாளுமன்றச் செயற்பாடுகள் தொடங்கியது.

1918 :- லிதுவேனியா விடுதலை அடைந்ததாகப் பிரகடனப்படுத்திக் கொண்டது.

ஜேர்மனிய விமானம் ஒன்று ஏறக்குறைய ஒரு தொன் வரையிலான நிறையுடைய குண்டு ஒன்றை லண்டனில் வீசியது.

1937 :- ஈ.ஐ.டியூமாண்ட் டி நெமூர்ஸ் என்ற அமெரிக்க இரசாயன கம்பனியினது ஆய்வுகூடத்தில் முதல்முதலாக நைலோன் உற்பத்தி செய்யப்பட்டது.

1955 :- சைபீரியாவில் 7200 மீற்றர் உயரமுடைய மலை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

1956 :- பிரிட்டிஷ் நாடாளுமன்றம் மரணதண்டனையை ஒழிக்கும் சட்டமூலத்தை நிறைவேற்றியது.

1959 :- பிடல் காஸ்ரோ கியூபாவின் ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

1970 :- விலங்குகளுக்கு புற்றுநோய் ஏற்படுவதற்கு ஒரு வகை வைரஸே காரணம் என்பதைக் கண்டுபிடித்துக் கூறிய அமெரிக்க விஞ்ஞானி பிரான்ஸிஸ் பெய்ட்டன் ரௌஸ் மரணமானார்.

1980 :- இருபதாம் நூற்றாண்டின் மிகமுக்கியமான வானியல் நிகழ்வுகளில் ஒன்றாக முழு சூரிய கிரகணம் ஏற்பட்டது. காலை 11.45 தொடக்கம் மாலை 5.01 வரை இது நீடித்தது.

1980 :- வீதிப்போக்குவரத்து வரலாற்றில் மிகப் பெரிய போக்குவரத்து நெரிசல் பிரான்சில் ஏற்பட்டது. லியான் நகரில் இருந்து பாரிஸை நோக்கி 175 கி.மீற்றர் தூரத்துக்கு வீதியில் வாகனங்கள் தேங்கி நின்றன.

1983 :- அவுஸ்ரேலியாவில் டான் டெனாங் பகுதியில் பாரிய காட்டுத் தீ ஏற்பட்டது. இதில் 70 பேர் வரை உயிரிழந்தனர். 8500 பேர் வீடிழந்தனர். 200, 000 வரையிலான கால் நடைகள் மாண்டுபோயின.

தொகுப்பு - சந்துரு

# கண்டாவளைப் பாடசாலையில் மாவீரர் நினைவாலயம் திறப்பு!



(கிளிநொச்சி)

காலத்தின் தேவையை உணர்ந்து, தம்மை விடுதலைப் போரில் இணைத்து ஆகுதியாக்கிய கண்டாவளை மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாவீரர்களின் திருவுருவப்படம் பொறிக்கப்பட்ட நினைவாலயம் பாடசாலை மைதானத்தில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியை சாள்ஸ் அன்ரனி சிறப்பு படையணியின் தளபதி நகுலன் ஏற்றி வைத்தார்.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் லோறன்ஸ் ஏற்றிவைக்க வடபோர் முனை கட்டளைத்தளபதி கேணல். ஜெயம் நினைவாலயத்தை திறந்து வைத்தார்.

தொடர்ந்து 45 மாவீரர்களின் பெற்றோர்கள் - திருவுருவப்படங்களுக்கு மலர் மாலை அணிவித்து ஈகச் சுடரை ஏற்றினர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், போராளிகள் எனப் பலரும் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர். கிளிநொச்சி மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் ஜவராஜ், கண்டாவளைப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் பூவிழி ஆகியோர் நினைவுரை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வின்போது 'கண்டாவளை செல்வம்' என்ற கை நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் நூலை வெளியிட்டு வைக்க, முதற் பிரதியை கேணல் ஜெயம் பெற்றுக் கொண்டார்.

புலிகளின் குரல் நிகழ்ச்சித் தொகுப்பாளர் பொன்.காந்தன், ஆசிரியர் விந்தன் ஆகியோர் வெளியீட்டுரையை நிகழ்த்தினர். இந்த நிகழ்வில் தளபதி கேணல் ஜெயம் சிறப்புரை நிகழ்த்தினார்.

### சுகாதார உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல்

கிளிநொச்சி சுகாதார மன்ற உறுப்பினர்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடல் - எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் சுகாதார மன்ற உறுப்பினர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

# தமிழ் மக்கள் மீது அரசு பாராமுகமாகவே இருக்கிறது

## கட்டளைத் தளபதி ஜெயம் தெரிவிப்பு



இலங்கை அரசு தமிழ் மக்களின் பக்கம் தொடர்ந்து பராமுகமாகவே செயற்பட்டு வருகிறது. எனவே எமது தலைவிதியை நாமே தீர்மானிக்கவேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டளைத் தளபதி கேணல் ஜெயம் தெரிவித்தார்.

கிளிநொச்சி - கண்டாவளை மகா வித்தியாலய முன்றலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மாவீரர் நினைவாலய திறப்பு விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுனாமி அனர்த்தத்தில் தாயகத்தில் ஏற்பட்ட மனித அவலத்தில் கூட, அரசு பாராமுகவே செயற்பட்டிருக்கிறது. இவ்வாறான செயற்பாடுகளை முறியடிக்கும் வகையில், எமது மக்களின் செயற்பாடுகளில் மேலும் மாற்றங்கள் ஏற்படவேண்டும்.

கண்டாவளையில் திறந்துவைக்கப்பட்டுள்ள இந்த மாவீரர் நினைவாலய திறப்பு விழா நிகழ்வு - மக்களின் எழுச்சி என்ற மாவீரர்களின் கனவுகளை நனவாக்கும் ஒரு நிகழ்வாகவே அமைகிறது. இவ்வாறான நினைவாலயங்கள் கிராமங்கள் தோறும் உருவாகவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்.

திருக்குறள்

# நமது நோக்கு

## தமிழ்-முஸ்லிம் மக்களின் உறவானது தமிழ்த்தேச பாதுகாப்புக்கு அவசியம்!

சுனாமி கடற்கோள் அனர்த்தம் காரணமாக வடக்கிலும் - கிழக்கிலும் ஏற்பட்ட வரலாற்றுப் பேரழிவு ஏற்படுத்திய துயரம் ஒரு நெடுங்கதையாகவே தொடர்கையில், இந்த அவலம் மிகுந்த சூழலிலும் அரசியல் ஆதாயம் காணமுயலும் சிங்களப் பேரினவாதிகளின் மனோதர்மத்துக்கும், மனிதநேயத்துக்கும் மாறான நடவடிக்கைகள், சிறுபான்மை சமூகத்தவரை மேலும் அடக்கி, ஒடுக்கும் இலக்கை மையமாகக்கொண்டே செயற்படுகின்றமைதான் தமிழ்பேசும் மக்கள் எதிர்கொள்ளவேண்டிய பேராபத்தாகியுள்ளது. தமிழ் பேசும் மக்கள் என இங்கே குறிப்பிடுவது, மத அடிப்படையிலான வேறுபாடுகளுக்கப்பால், மொழியின் அடிப்படையில் ஒரே உணர்வும், ஒரே தேசியத் தன்மையும் கொண்ட தமிழ்பேசும் இந்துக்களையும், தமிழ் பேசும் இஸ்லாமியர்களையும் ஓரணிக்குள் அடக்கிய மக்கள் தொகையேயாகும்.

வடக்கில் எவ்வாறு காலங்காலமாக சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களாலும், அவர்களின் ஆயுதப் படையினராலும் தமிழ் பேசும் இந்துக்கள் பெருமளவிலும், ஏனையோரும் பாதிப்புகளுக்கும், இழப்புகளுக்கும் உள்ளானார்களோ அதேபோன்று கிழக்கில் தமிழ் பேசும் இஸ்லாமிய சகோதரர்கள் - அவர்களும் தமிழர்கள் என்ற காரணத்துக்காக - தற்போது திட்டமிட்டவகையில் - நுணுக்கமான உத்திகளைப் பயன்படுத்தி அரசால் ஒடுக்கப்படும் நிலை தீவிரமாகியுள்ளது.

கடந்த மூன்று தசாப்தகால போர்க்காலத்தில் தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையேயான பல தசாப்தகால இறுக்கமான சகோதரத்துவ உறவைப் பிரித்தாளும் தந்திரோபாய அரசியல் உத்திகளைப் பயன்படுத்தி, சிங்கள ஆட்சியாளர்கள் எவ்வாறெல்லாம் சிதைத்தார்கள் என்பது தெரிந்த விடயமே.

பேரினவாதிகளின் ஊடுருவல் செயற்பாடுகள், வடக்கு - கிழக்கின் எல்லைப்பகுதிகளில், திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் - அபிவிருத்தி என்ற போர்வையில் ஆக்கிரமிப்பை மேற்கொள்ளத் தொடங்கியபோதே, சிங்கள அரசு சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான ஆக்கிரமிப்பு அழிப்புப் போரை ஆரம்பித்துவிட்டது என்ற உண்மையை தமிழ் மக்கள் முற்றாகப் புரிந்துகொண்ட அளவுக்கு, முஸ்ஸிம் மக்கள் அது குறித்து எச்சரிக்கையடையாது போனது துரதிரஷ்டமேயாகும். சிங்களப் பேரினவாதிகளின் தொலைநோக்கு சிந்தனையுடன்கூடிய 'அரவணைத்து அழிக்கும்' அரசியல் மூலோபாயத்துடனான உத்திகளுக்குப் பெரும்பாலான முஸ்லிம் தலைமைகள் அப்பாவித்தனமாகவும், சில தமிழ்த் தலைமைகள் தத்தம் சுயநல அபிலாஷைகளை நிறைவேற்றிக்கொள்ளும் நோக்குடனும் பலியாகிப் போனதன் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளின் எதிர்விளைவே ஒரு பாரிய போருக்கு வழிகோலியது.

இலங்கையின் இனப்பிரச்சினை என்பது பௌத்த, சிங்கள பேரினவாத சக்திகளுக்கும், தமிழ் பேசும் இந்து மற்றும் இஸ்லாமிய மக்களுக்கும் இடையிலானதேயாகும்.

தமிழ் பேசும் மக்கள் ஓரணியில் மத - இன - சாதி பேதங்களின்றி இணைவது பேரினவாதிகளின் அரசியல் அபிலாஷைகளுக்கு ஆபத்தாகிவிடும் என்பதாலேயே ஆட்சியில் உள்ளோர், தமிழ் - முஸ்லிம் மக்களிடையேயான பாரம்பரிய உறவுக்கு சிதைவேற்படுத்த முனைந்து அதில் வெற்றியும் கண்டனர் என்றே கூறவேண்டும்.

இதன் காரணமாக தமிழ் - முஸ்லிம் மக்களிடையேயான தமிழ்த் தேசியத்தின் அடிப்படையிலான புரிந்துணர்வும், நேச உறவும் அதன் இறுக்க நிலையில் தளர்ச்சி காணும் நிலை உருவானது.

1990 ஆம் ஆண்டுகளில் தமிழ் - முஸ்லிம் சகோதரத்துவம் முரண்பாடுகளால் சிதைந்துபோக, அரசு மட்டும் காரணமல்ல, இரு பகுதிக்குள்ளும் பேரினவாதிகளின் ஊடுருவல் செயற்பாடுகள் ஏற்படுத்திய சந்தேகங்களும் காரணமாகும்.

இந்தச் சந்தேகங்கள் சில வரலாற்றுத் தவறுகளுக்கும், துயரங்களுக்கும் மூலகாரணமானதின் விளைவுகள் விளக்கப்படவேண்டியவைகளல்ல.


இப்போது அந்தத் தவறுகள் இருதரப்பாலும் புரிந்து கொள்ளப்பட்ட நிலையில், அந்தப் பாரம்பரிய உறவு மீண்டும் இறுக்கமடையத் தொடங்கியுள்ளமை மகிழ்ச்சிதரும் விடயமேயாகும். அது மட்டுமல்ல, இது ஒரு வரலாற்று அவசியமுமாகும்.

இந்த உறவை நாம் வலிமையான புரிந்துணர்வுடனும், பரஸ்பர நம்பிக்கையுடனும் கட்டியெழுப்பி, நம்மை அடக்கி - நம் பாரம்பரிய வாழ்நிலங்களை மெல்ல மெல்ல ஆக்கிரமிக்கும் சிங்கள இனவாதிகளுக்கு எதிராகப் போராடாவிடில், நாம் சொந்த மண்ணில் நாடற்றோராக, உரிமைகளுக்கு யாசிப்போராக மாறவேண்டிய நிலை ஏற்படுவதைத் தவிர்க்கவே முடியாதுபோய்விடும்.

கிழக்கில் அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட தலைவர்களுக்கும், இஸ்லாமிய பெரியோர்கள் மற்றும் தலைவர்களுக்கும் இடையில் நடந்த சந்திப்பின் போது, உரையாடப்பட்ட விடயங்கள் ஆக்கபூர்வமான செயல்வடிவம் பெறுவதை விரைவாக்க, இருதரப்பும் முனைப்புடன் செயற்படுவது அவசியமாகும்.

இதுவே தமிழ் - முஸ்லிம் மக்களின் எதிர்கால சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் விடயமுமாகும்.

## நாடும் நடப்பும்




## ஜனாதிபதியின் மட்டக்களப்பு விஜயத்துக்கு கூட்டமைப்பு எம்.பி.ஜெயானந்தமூர்த்தி எதிர்ப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட திராய்மடு கிராமத்தில் சுனாமியால் பாதிக்கப் பட்ட மக்களுக்கான வீட்டுத்திட்டத்துக்கு அடிக்கல் நாட்ட ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க எதிர்வரும் 20 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வருகைதரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அவரின் விஜயத்தை எதிர்ப்பதாக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ் .ஜெயானந்தமூர்த்தி தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

கடந்த பல ஆண்டுகளாக தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வழங்குவதற்கு தவறிவிட்ட ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் கோரமான போரை முன்னெடுத்துச் செல்வதிலேயே ஆர்வம் காட்டியிருந்தார்.

ஆனால், தற்போது சுனாமி அனர்த்தத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு உதவி செய்வதாகவும், தமிழ் பிரதேசங்களை அபிவிருத்தி செய்யப் போவதாகவும் பூச்சாண்டி காட்டுகிறார்.

இந்த வகையிலேயே ஜனாதிபதியின் மட்டக்களப்பு மாவட்ட விஜயம் அமைகிறது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டுத் திட்டம் உட்பட அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் மேற்கொள்ளவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். இந்தத் திட்டங்களுக்காக வெளிநாடுகள் பல கோடி ரூபா நிதியை வழங்கிவருகின்றன.

இந்த நிலையில் ஜனாதிபதி தானே நேரடியாக வந்து அடிக்கல் நாட்டும் நிகழ்வானது - தமிழ்மக்களை ஏமாற்றும் ஒரு கண்துடைப்பு நிகழ்வாகும். ஜனாதிபதியின் இந்த நடவடிக்கையை தமிழ் மக்கள் என்றுமே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அதனால் ஜனாதிபதியின் மட்டக்களப்பு மாவட்ட விஜயத்தை நான் கடுமையாக எதிர்க்கிறேன் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பொலநறுவைப் பகுதியில் பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

பொலநறுவைப் பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

சுமார் 50 புலிகள் வெலிக்கந்த பகுதிக்குள் ஊடுருவியதாகக் கிடைத்த தகவலை அடுத்தே இங்கு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கௌசல்யன் உள்ளிட்ட போராளிகள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்தே புலிகள் இந்தப் பகுதிக்குள் ஊடுருவியதாகவும், இது தொடர்பாக இராணுவத் தரப்பு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் செய்த முறைப்பாட்டை அடுத்து அவர்கள் இங்கு சென்று நிலைமைகளைப் பார்வையிட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (01)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு விரும்பும் இடங்களில் தற்காலிக இடமாற்றம்

(திருகோணமலை)

சுனாமி அனர்த்தத்தால் தமது குடும்ப உறுப்பினர்களை இழந்த மற்றும் வதிவிடங்கள், சொத்துக்களை இழந்த வடக்கு, கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கு - உடனடியாக அவர்கள் விரும்பும், அவர்கள் தற்போது தங்கி இருக்கும் வதிவிடங்களுக்கு மிக அருகாமையில் கடமைபுரியக்கூடிய வகையில் தற்காலிக இடமாற்றம் வழங்க வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் ரிரோன் பெர்ணான்டோ சம்மதம் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை திருகோணமலையிலுள்ள மாகாண ஆளுநர் செயலகத்தில் நடந்த மாகாண கல்வி ஆலோசனைச் சபையின் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாகாண மட்டத்தில் கல்விச்சேவை தொடர்பான ஆலோசனைகளை மேற்கொள்ளவும், ஆசிரியர்கள், அதிபர்கள், பாடசாலை ஊழியர்கள், பாடசாலைக் கட்டடங்கள் நிர்மாணம், இடமாற்றங்கள், பதவி உயர்வுகள் என்பன தொடர்பான முடிவுகளைக் கலந்தலோசிக்கவும் என இந்த மாகாண கல்வி ஆலோசனை சபை ஆளுநரால் அமைக்கப்பட்டுள்ளது.

இவை தவிர பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படும் 12 மாத சம்பள முற்பணக் கடனை வட்டியின்றி வடக்கு, கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட அனைத்து ஆசிரியர்களுக்கும் வழங்குவதற்குரிய நிதியை, மத்திய அரசிடம் இருந்து மாகாணத்துக்குப் பெற்றுக் கொள்வது போன்ற தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

இந்தக் கல்வி ஆலோசனை சபைக் கூட்டத்தில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் பொதுச் செயலாளார் த.மகாசிவம் வடக்கு, கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாண பிரதம செயலாளர் ஆகியோருடன் திருகோணமலை கல்வி வலயத்தில் இருந்து செயற்படும் சில தமிழ் மற்றும் இஸ்லாமிய ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.(10)

## புகை கக்கும் வாகனங்களுக்கு ஜனவரி முதல் அனுமதி ரத்து!

சூழலை மாசடையச் செய்யும்விதத்தில் புகைகக்கும் சகல வாகனங்களும் அடுத்தவருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் முற்றாகத் தடைசெய்யப்படும் என்று சுற்றாடல் மற்றும் இயற்கைவள அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி தெரிவித்தார்.

இந்தத் தடை கண்டிப்பாக அமுல்படுத்தப்படுவதுடன், இந்தத் தடையை மீறுபவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் -

புகை கக்கும் வாகனங்கள் பாவனையில் உள்ளதால் சூழல் பெரிதும் பாதிப்படைகிறது. அத்துடன் புற்றுநோய் போன்ற ஆபத்தான நோய்களும் நாளுக்குநாள் அதிகரிக்கும் அபாயம் ஏற்படுகிறது. வாகனத்திலிருந்து வெளியாகும் புகை வளி மண்டலத்தைச் சென்றடைவதுடன், ஓசோன் படலத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இதனால் பூமியில் உஷ்ணம் அதிகரித்துக் காணப்படுவதுடன், கடற்கொந்தளிப்பும் ஏற்படுகின்றது. இவ்வாறு ஏற்படும் சூழல் மாசடைதலையும், ஆபத்துககளையும் தடுக்கும் நோக்கிலேயே அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதிமுதல் இந்த வாகனங்களை தடைசெய்வதற்கான அமைச்சரவையின் அங்கீகாரத்தைக் கோரியிருந்தேன். தற்போது அதற்கான அனுமதி கிடைத்துள்ளது.

பாவனையிலுள்ள மற்றும் ஏற்கனவே பாவனையிலுள்ள வாகனங்களை பரிசீலனை செய்து, அந்த வாகனங்களிலிருந்து சூழலில் மாசடைவை ஏற்புடுத்தும் புகை கக்குகின்றதா என்பதை உறுதி செய்து, அதற்கர்ன சான்றிதழ் வழங்கப்படும். இந்தப் பரிசோதனைகளை மேற்கொள்ளும் பொறுப்பு இரண்டு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

பகுதி - 40

சங்கர்

# காற்றே நீ எம் கதை கேளாயோ...
# அலையே நீ எம் நிலை உணராயோ...

மூண்டாவது அலைக்கு நாலு பேர் கடைக்குள்ள நிண்டிருக்கினம். எங்கட அம்மா, தம்பி, இன்னொரு அம்மா, அதோடு சேர்த்து பன்ரெண்டு வயசுப் பெடியன். கட்டடம் தான் ஒண்டும் செய்யாது எண்டுதான் நிண்டிருக்கினம். அப்ப அலை அடிச்ச நேரம் மூண்டு பேர் செத்திட்டாங்க. கடை தரை மட்டமாப் பேச்சுது. தம்பிக்கு மேல தான் கடைவிழுந்திரிக்கு. மற்ற எல்லாரயும் அடிச்சுக் கொண்டு போச்சுது. இதில எங்கட அம்மாவ மட்டும் பனை மரத்தில ஏத்தியிருக்கு.

"உங்கட தம்பிக்கு என்ன பேர்? வயசு?"


"விக்னேஸ்வரன், வயது 26"

"கலியாணம் கட்டிட்டாரோ?"

"கேட்டதுக்கு முப்பது வயசில தான் முடிப்பன் எண்டார்".

"நீங்கள் என்ன மாதிரி தப்பினீங்கள்?"

எங்கட அவரும் மகளை தேடி தான் ஓடித்திரிந்தார். அப்ப தம்பியக் கண்டுட்டார். அவர் எப்படியாவது மகனக் காப்பாத்துவார் எண்டு, எங்களக் காப்பாத்துவம் எண்டு கடையச் சுத்தி வந்து எங்கட ரெண்டு வயசுப் புள்ளயக் கரையில் கொண்டு, என்னயும் கொண்டு வாற நேரம் அலை வந்து என்னையப் பிரிச்சு எடுத்திட்டு. அவர் புள்ளயக் கொண்டு போய் காட்டில ஓடித்தார். என்னை அலை கொண்டு போக நான் ஒரு வேலிக் கட்டையப் புடிச்சித்தன். அலை குறைய ஓடி கால் தவறி விழ, அலை வீட்டுக்க அடிச்சித்துப் போச்சு. கொண்டு போய் வீட்டுப் பிளேட்டில அடிக்க எனக்கு மயக்கம் குணமாயிருந்திச்சு. திரும்பி அடிச்சித்து வர மேல உருத்திச்சு. வளையப் புடிச்சுத் தொங்கி என்ட வளையப் புடிச்சு ஓட்டக் கழத்தப் பாத்தன். ஏனெண்டா அலை அடிச்சதோட திரும்பிப் போக கதவெல்லாம் என்னால சுழட்டவும் முடியேல்ல.



இப்ப அவர் கத்துற சத்தம் கேட்டுது. ராணியெண்டு அப்பதான் சொன்னன். நான் மேல தான் இருக்கிறன், நீங்கள் எப்பிடியாவது ரெண்டு பிள்ளகளையும் காப்பாத்துங்க எண்டு. ஏன் எண்டு கேட்ட "கதவு பூட்டுப் பட்டுத்து. வெளிய வாறதுக்கு வழியில்ல எண்டு நான் சொல்ல, அவரே வந்து கதவை அடிச்சு, உடைச்சு என்னை வெளிய எடுத்தார். வெளிய எடுத்து நாங்க போய் கொஞ்ச நேரத்தால அடுத்த அலை வந்து அப்படியே வீட்டை இடிச்சுத்துப் போயித்து.

நானும் சாகிறனான்தான். என்னவோ அவர் கதவை உடைச்சு வெளிய எடுத்திட்டார். இல்லாட்டி, நானும் தம்பியப் போல போறனான் தான்.

"உங்கட சொந்தக்காரர் வேற ஆரும் சுனாமியில.....?"

"நிறைப்பேர், எங்கட அப்பாட தங்கச்சி. நாவலடியில செத்தாக்களும், எங்கட சொந்தக் காரங்கதான் அறுபது பேருக்கிட்ட எங்கட சொந்தமேபோயித்து. என்ன செய்யிறதெண்டு தெரியாமல் தலை விறைச்சுப் போயிருக்கிறம். கத்துறதுக்கும் கண்ணால தண்ணியே வாறளவுக்கில்ல.

என்னை விட்டுட்டே பிரியமாட்டா தம்பி. வளவுப்பக்கம் போனாலே அவர் கூப்புடுற மாதிரியிருக்கு. நேற்று வளவுப்பக்கம் போக, எண்ட ரெண்டு வயசுப் பிள்ள நிண்டு மாமாவைக் கூப்பிடுறாவு. நான் இறக்கி விட்டுட்டு வளவப் பாக்க, அவ மாமா மாமா எண்டு கூப்பிடுறாவு. அவ மாமாவ மறக்கிறமாதிரியில்ல. அஞ்சு வயது மூத்த மகனுக்கு அவர் சாப்பிடுறாரில்ல ஒழுங்கா. இண்டைக்கு எங்கட அம்மா அவரை மட்டக்களப்புக்குக் கொண்டு போறாவு. அவற்றை மனசை மாத்த.

இரவில மாமா வந்து கதைக் கிராரம்மா. பகலில வாறாரில்ல விளையாடுறதுக்கு. மாமாவை பகலில வரச் சொல்லுங்கம்மா எண்டு மகன் சொல்றாரு. நான் எவ்வளவோ சொல்லிப்பார்த்தன். வெளிநாடு போயிட்டாரு, கொலோன் கொண்டு வருவாரெண்டு ஆனா அதுகள் மறக்கிறமாதிரியில்ல.

அம்மாவ பனை மரத்தில ஏத்தின மாதிரி தம்பியயும் காப்பாத்தியிருக்கலாம் தான். அவ பனை மரத்தில இருந்தவ காப்பாத்த மாட்டாங்க எண்ட நினைப்பில அதில இருந்து விழுந்திட்டாவு. விழுந்து இடுப்பு ஏலா. இப்ப எழும்புறதெல்லாம் கஷ்டம் தான்.

"உங்கட அம்மாவுக்கு என்ன பேர்?"

"மாரிமுத்து வயசு 52"

"ஏன் மரத்தில இவ இருந்ததை ஆக்கள் காணயில்லயா?"

"இல்ல, அந்தப் பெரிய அலைக்கு எல்லாரும் ஓடித்தாங்க. அந்த நேரம் இவ பாத்திருக்காவு நம்ம மேல இருந்தமெண்டா பக்கத்தில ஒருத்தரும் இல்லத்தான்? கீழ விழுந்த மென்டா வாறாக்கள் கண்டு பிடிப்பாங்க எண்டுதான் கீழை விழுந்தா. ஆனா எங்கட நாய் அவவ விட்டுப் போகல்ல. அதுதான் ஊருக்க வந்த ஆட்களிட்ட அம்மாவ காட்டிக் குடுத்திருக்கு. இரவு எட்டரை மணிக்குத் தான் அம்மாவ காட்டுக்குள்ள கொண்டந்து சேத்து , அடுத்த நாள் ஆறு மணிக்குத்தான் பனிச்சங்கேணி பாலத்துக்குப் போனனாங்க. அதுக்குப் புறகு தான் ஆஸ்பத்திரியில் சேத்த. அப்படி ஒரு மருந்தே இல்லாம அவதிப்பட்டனாங்க - அடுத்த நாள் ஆறு மணிக்குத் தான் சாப்பாடு - உடுப்பு கிடைச்சது.

என்னட தம்பி மகனாரக் கோயிலுக்கு மேல ஏத்தி காப்பாத்தக் குள்ளயும் தேவாரம்தான் படிச்சிருக்கார். காட்டில கொண்டு போய் ரெண்டு புள்ளகளையும் எனக்கிட்டத் தந்து போட்டு எங்கட அவர் தம்பியயும், அம்மாவயும் தேடி போகக் குள்ள எண்ட அஞ்சு வயசுப் பெடியனுக்கு இடுப்பளவு தண்ணி.அப்ப அவரயும் தூக்கோணும், மற்றப் புள்ளயயும் தூக்கோணும் எண்டு கத்திக் கொண்டு இருக்கேக்க மகன் சொல்லுறான், (தொடரும்)

செய்திக் கட்டுரை

அஸ்மிதா

# சுனாமி கடற் கொந்தளிப்பின் காரணமாக சின்னா பின்னமாகியுள்ள வடமராட்சி கிழக்கு

(நேற்றைய தொடர்ச்சி)

"ஒருநாள் போவார் ஒருநாள் வருவார். ஒவ்வொரு நாளும் துயரம்"

தனது கணவன் கடலுக்குச் சென்று திரும்பும்வரை கரையினிலே மனைவியும், பிள்ளைகளும் காத்து நிற்பார்கள்.

இன்று கரையினிலே நின்ற மனைவியையும், பிள்ளைகளையும் கணவன் முன்னாலேயே சுனாமி அடித்துச் சென்றுள்ளது.

இந்தச் சுனாமி கடல் அனர்த்தம் காரணமாக - வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் சுமார் 4 ஆயிரத்து 500 குடும்பங்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மக்கள் பச்சிலைப்பள்ளி பிரதேசத்துக்கும், அரச கட்டுப்பாட்டுப் பிரதேசமான மணற்காடு, குடத்தனைப் பகுதி மக்கள் புலோலி, வரணி ஆகிய பகுதிகளுக்கும் கொண்டு செல்லப்பட்டனர். சுனாமி கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட பலர் இன்னமும் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பாதுகாப்பின் நிமித்தம் இடம்பெயர்ந்த மக்கள் தற்போது தமது சொந்தக் கிராமங்களுக்குச் சென்றுள்ளனர். இடம்பெயர்ந்து வாழ்ந்த நேரத்தில், புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழ் உறவுகள் நிதியுதவிகள் செய்துள்ளனர். தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மற்றும் தொண்டர் நிறுவனங்கள், கழகங்கள் என்பன உடனடி உதவிகளைச் செய்துள்ளன.

தமது சொந்தக் கிராமங்களுக்குச் சென்ற மக்களில் பலர் தமது குழந்தைகளைப் பறிகொடுத்த இடத்துக்குச்சென்று, புலம்பி அழும் காட்சிகள் தினமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கடற்கரையிலிருந்து சுமார் அரைக்கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் இந்த மக்களைக் குடியமர்த்தும் நடவடிக்கைகளில் கடற்புலிகளும், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையும் ஈடுபட்டு வருகின்றன.

இதேவேளை இந்தப் பிரதேசத்தின் இடிபாடுகளை அகற்றும் பணியில் விடுதலைப்புலிகள் ஈடுபட்டு வருகின்றனர். இடிபாடுகளை அகற்றுவதற்கு "டோசர்கள்" தேவையாகவுள்ளன. அரச, அரசசார்பற்ற நிறுவனங்களிடம் இந்தத் தேவைபற்றிப் பலதடவை தெரிவித்தும், இதுவரை எந்தவித டோசர்களையும் எந்த ஒரு நிறுவனமும் அனுப்பிவைக்கவில்லை எனக் கவலையுடன் தெரிவித்தார் கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான மங்களேஸ். தமது அமைப்பின் டோசர்கள் மூலமே இடிபாடுகள் அகற்றப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

2002 ஆம் ஆண்டு சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டதன்பின்பு, இந்தப் பிரதேசத்தில் 10 வருடங்களின் பின்பு மீளக்குடியமர்ந்த இந்த மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்பாடு அடையச்செய்வதற்கு கல்வித் திணைக்களம், கடற்புலிகள், கல்விச் சமூகம், உதவி அரசாங்க அதிபர் பணிமனை என்பன கூட்டாகச்சேர்ந்து செயற்பட்டு வருகின்றன. இதன் காரணமாக இந்தப் பிரதேச மக்கள் பொருளாதாரத்திலும், கல்வி, சுகாதாரம் போன்றவற்றிலும் பாரிய வளர்ச்சியைக் கண்டனர். இந்தப் பிரதேச மக்களின் சமூக மேம்பாட்டுக்குத் தொண்டர் நிறுவனங்களின் பங்களிப்பும் இன்றியமையாததாக இருந்தது.



நிகொட், ஜீ.ரி.இசற் போன்ற நிறுவனங்கள் இந்தப் பிரதேசத்தின் மேம்பாட்டுக்குப் பெரிதும் உதவி செய்தன. சுனாமி இராட்சத அலைகள் காரணமாக எல்லாமே தவிடு பொடியாக்கப்பட்டன.

இந்த அனர்த்தத்தால் கடற்தொழில் உபகரணங்கள் மற்றும் சொத்துக்கள் பெரிதும் அழிந்து போயுள்ளன. வடமராட்சி கிழக்கு கடற்தொழில் சமாசத்தினருக்குக் கோடிக்கணக்கில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சி கிழக்கு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்துக்கு சுமார் ஒரு கோடியே 10 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சங்கத்தின் 10 கிளைகளும், அவற்றிலுள்ள பொருட்களும் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

வீதிப் போக்குவரத்தும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. மாமுனை - கட்டைக்காடு வீதி முற்றாகச் சேதமடைந்துள்ளது. இந்த வீதி நிகொட் நிறுவனத்தால் புனரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சுனாமி இராட்சத அலை ஏற்படுத்திய அனர்த்தத்தால் வடமராட்சி கிழக்குப் பிரதேசம் கல்வியில் பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது. பல பாடசாலைகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. மாணவர்கள் பலர் இறந்துள்ளார்கள். இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த அனைத்து மாணவர்களும் காயத்துக்கு உள்ளாகியுள்ளனர். மனநிலை பாதிக்கப்பட்டு உளத்தாக்கம் கொண்டவர்களாக இந்த மாணவர்கள் காணப்படுகிறார்கள்.

இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆசிரியர்களும் பல்வேறுவிதமான பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர். சிலர் உயிரிழந்தும், தமது மனைவிமாரைப் பறிகொடுத்தும், தமது குழந்தைகளைப் பறிகொடுத்தும், தமது உறவுகளைப் பறிகொடுத்துமுள்ளனர். ஒட்டுமொத்தமாக எல்லோரும் உடமைகளை இழந்துள்ளனர்.

சமாதான ஒப்பந்தத்தின்பின்னர் மக்கள் மீளக்குடியேறியதைத் தொடர்ந்து பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டு, படிப்படியாகக் கல்வியில் முன்னேற்றமடைந்து, நிகொட் நிறுவனத்தால் பல பாடசாலைகளுக்குக் கட்டடங்களும், தளபாடங்களும் அமைத்துக் கொடுக்கப்பட்டன. ஜீ.ரி.இசற் நிறுவனத்தால் மலசலகூடங்கள், அமைத்துக் கொடுக்கப்பட்டன. சுனாமி கடற்கொந்தளிப்பு எல்லாவற்றையும் சுக்குநூறாக்கிவிட்டது.

இருந்தும் பாடசாலைகள் இயங்கத்தொடங்கிவிட்டன. மாணவர்கள் கற்கும் மனநிலையில் இல்லை. மாணவர்களை ஆற்றுப்படுத்தும் நடவடிக்கையில் அதிபர்கள், ஆசிரியர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். மாணவர்களைத் தேடி ஆசிரியர்கள் முகாம்களுக்குச் செல்கிறார்கள்.

ஆனால் மாணவர்களோ சிலர் அனாதைகள், சகோதரத்தை இழந்தவர்கள், உறவுகளை இழந்தவர்கள். இப்படிப் பலநிலை.

முகாம்களில் வாழ்கின்ற இந்த மக்கள் பலர் கடற்கரைப்பக்கமே செல்வதில்லை. கடல் இப்போது அவர்களுக்குக் கொலைக்களமாகவே தெரிகின்றது. எந்தநேரமும் இந்தக் கடல் தம்மை அடித்துச் சென்றுவிடும் என்ற பீதியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

"உன்மடியில் தவழ்ந்துவந்த
நின் செல்லக்குழந்தைகள் தான
செய்த பிழை என்னம்மா!

அவன் கண் மூடுவதும் விழிப்பதுவும்
உன்னை நம்பித்தானே!
உன் பூகம்ப அலை நடுவே
கண்ணான செல்வங்களை, மனை
-வியை
கை தவறிவிட்டுக் கதறுகிறானே!
உன்னால் தோன்றிய பரம்பரையை
உன்னுடனே எடுத்தாயோ
காலன் இட்ட கட்டளையோ!
கடவுள் செய்த சோதனையோ!
கடலம்மா கடமை முடிந்ததென்று
கண் மூடித் தூங்குகின்றாயா?

இங்கென்ன மீதியுண்டு
நனைகின்ற விழியோடு
உழைக்கின்ற மனத்தோடு
நடைப்பிணமாகி நடுவீதியிலே
அலைந்தோட விட்டு விட்டாய்
அவர்களின் எதிர்காலம்?

கட்டடங்களைக் கட்டலாம், சொத்துக்களைச் சேர்க்கலாம் இழந்த உறவுகளை மீட்க முடியுமா? இந்த நேரத்தில் குடாநாட்டு மக்கள் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட்டு, நிர்க்கதியாகவுள்ள மக்களுக்கு ஆறுதல் கூறவேண்டும். குறிப்பாக கல்விச்சமூகம் உடனடியாகக் களத்தில் இறங்கிச் செயற்படவேண்டும். இதுவே முதற் பணியாகும்.

என் அன்புச் சோதரனே!
உன் சோதரன் ஒருவரின்
ஓலமிது கேட்கின்றதா?
அராஜகர்களின் அட்டூழியத்தால்
அன்று உடமைகளை இழந்து நின்
-றான்
இன்று இயற்கையின் அனர்த்தத்
-தால்
உடமைகளை மட்டுமல்ல,
உற்ற உறவுகளையும் பறிகொடுத்துப்
பரிதவிக்கின்றான் பார்த்தாயா?
நீ சென்று அக் காட்சியைப் பார்த்
-தாயா?
புண்பட்ட இதயங்களுக்கு
மருந்தாக நீ செல்வாயா?
மனித வாழ்க்கையின் நியதிகளை
உணர்ந்திடுவாய்!
மனிதாபிமானத்துடன் புறப்பட்டு
வருவாயா? (முற்றும்)

# தவக்கால நற்சிந்தனை

"கொராசின் நகரே ஐயோ உனக்குக்கேடு!, பெத்சாயிதா நகரே ஐயோ உனக்குக்கேடு" (லூக். 10:13)



இறைமகன் கிறீஸ்து கொராசின், பெத்சாயிதா ஊர்மக்கள் மத்தியில் அநேக அற்புதங்களைச் செய்திருந்தும், மனந்திரும்புங்கள் என்று இடையறாது போதித்திருந்தும், அதற்கு செவிமடுக்காது மனம் போனபோக்கிலே அவர்கள் வாழ்ந்ததால், கடின வார்த்தைகளைச் சொல்லி, கல்லான இதயம் கொண்டவர்களைச் சாடுகிறார். இன்று நாம் எந்நிலையில் நிற்கிறோம்? அறிவியல் துறையில் முன்னேற்றம் கண்ட இன்றைய உலகிலே, இறைவார்த்தையானது நம் உள்ளங்களிலே ஆழமாகச் செயற்பட விதைக்கப்படுகிறது. மறையுரைவழியாக, தொலைத் தொடர்பு சாதனங்கள் வழியாக, புத்தகங்கள், இயல், இசை, நாடகங்கள், நேரடி ஊழியங்கள் வழியாக அவரின் வார்த்தைகள் - நாம் மனம் மாறுவதற்காக, மனம் திருந்துவதற்காக விதைக்கப்படுகிறது. இவற்றை நாம் கேட்பவர்களாக மட்டும் இருக்கிறோமா? அல்லது இவற்றுக்கு செவிமடுத்து கல்லான இதயத்தை உடைத்தெறிந்து விட்டு, கனிவான அன்பு உள்ளம் கொண்டவர்களாய் மனம் மாற விரும்புகிறோமா?

மோ.தார்சீசியஸ்

# சீனாவில் நிலக்கரி சுரங்க விபத்து 203 தொழிலாளர்கள் மரணம்



(பீஜிங்)

சீனாவில் இடம்பெற்ற நிலக்கரிச் சுரங்க வெடிவிபத்தில் 203 சுரங்கத் தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளதாக சீன ஊடகமான சின்குவா தெரிவித்துள்ளது.

இந்த வெடிவிபத்து சீனாவின் வடகிழக்கு மாகாணமான புக்சின் நகரத்தில் இடம்பெற்றுள்ளதாகவும், இந்தச் சம்பவத்தில் 22 தொழிலாளர்கள் கடுமையான காயங்களுக்குள்ளாகியதாகவும், 13 பேர் சுரங்கத்துக்குள் அகப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்து எவ்வாறு ஏற்பட்டதென்பது தொடர்பான விசாரணைகள் உடனடியாகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 1949 ஆம் ஆண்டிலிருந்து சீனாவில் கம்யூனிஸ ஆட்சி நடைபெற்றுவரும் நிலையில், தற்போதே முதன்முறையாக நிலக்கரிச் சுரங்க விபத்தில் பெருமளவான சுரங்கத் தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

சுரங்கத்துக்குள் அகப்பட்டுள்ள தொழிலாளர்களை மீட்பதற்கு சாத்தியமான சகல வழிகளையும் மேற்கொள்ளுமாறு சீன ஜனாதிபதி இயூ ஜினராயோ மற்றும் பிரதமர் வென் ஜியாபயோ ஆகியோர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளனர். கடந்த வருடம் நவம்பரில்சீனாவில் நடந்த நிலக்கரிச் சுரங்க விபத்தில் 166 பேர் கொல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# ஈரானில் தீ; 35 பேர் பலி!

(தெஹ்ரான்)

ஈரான் நாட்டின் தலைநகர் தெஹ்ரானில் திங்கட்கிழமை மாலை நடந்த தொழுகையின்போது மசூதியில் ஏற்பட்ட தீ விபத்தில் 35 பேர் இறந்தும் 200 பேர் காயமடைந்துமுள்ளனர்.

உலக நோக்கு

ஆடவர் மகளிர் தொழுகைக்கு அமரும் இடத்தைப் பிரிக்கவும் மகளிரை மறைக்கவும் போடப்பட்டிருந்த துணித் திரையில் மின்சாரக் கசிவு காரணமாக தீ பிடித்தது. அது வேகமாகப் பரவியது. மசூதியில் கூட்டம் அதிகம் இருந்ததால் மக்கள் வெளியேறுவதற்குள் தீ பரவியது.

# லெபனான் முன்னாள் பிரதமர் கார் குண்டுத்தாக்குதலில் பலி!



லெபனானில் முன்னாள் பிரதமர் ரபீக் ஹரீரி தலைநகர் பெய்ரூட்டில் காரில் சென்றுகொண்டிருந்தவேளை கார்க் குண்டுத் தாக்குதல் மூலம் கொல்லப்பட்டார்.

முன்னாள் பிரதமர் நேற்றுமுன்தினம் தனது காரில் தலைநகர் பெய்ரூட்டிலிருந்து சென்ஜோஜன் ஹோட்டலை தாண்டி சென்றுகொண்டிருந்தவேளை குறித்த ஹோட்டலுக்கு அருகில் நின்ற காரொன்றிலிருந்து குண்டு வெடித்ததிலேயே ரபீக் ஹரீரி உட்பட 11 பேர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கார்க் குண்டுத் தாக்குதலில் லெபனானின் முன்னாள் பொருளாதார அமைச்சர் ஹர்வான் ஹமாதி மற்றும் மற்றொரு முன்னாள் அமைச் சர் உட்பட 35 பேர் படுகாயமடைந்து வைத்திய சாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்கு லெபனான் மற்றும் சிரிய அரசாங்கங்கள் பொறுப்பேற்கவேண்டுமென லெபனான் எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது. அத்துடன் இந்தக் கொலைக்கு பொறுப்பேற்று லெபனான் அரசு உடனடியாக பதவி விலகவேண்டுமெனவும், லெபனானிலுள்ள சிரிய துருப்புகள் மூன்று நாள் துக்கதினத்திற்கு முன்னர் வெளியேற வேண்டுமெனவும் எதிர்க்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

ஆனால் இந்தத் தாக்குதலை நடத்தியதாக தெரிவிக்கப்படும் குற்றச் சாட்டை மறுத்துள்ள சிரிய ஜனாதிபதி பசார் அல்அசாத் இந்த தாக்குதலானது மிகப் பயங்கரகுற்ற நடவடிக்கை எனவும் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் மனிதத்தன்மையற்ற தாக்குதல் மூலம் படுகொலை செய்



யப்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. லெபனான் எதிர்கால அரசியலுக்காக வன்முறைகளைக் கைவிட வேண்டும். அத்துடன் சிரிய ஆக்கிரமிப்பிலிருந்தும் அது விடுபடவேண்டுமெனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதேவேளை கார்க்குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட முன்னாள் பிரதமருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் லெபனானில் மூன்று நாள் துக்கதினம் அனுஷ்டிக்குமாறு லெபனான் அரசு தெரிவித்துள்ளது. அத்துடன் லெபனானில் உள்நாட்டு போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளதை அடுத்து அங்கு இராணுவம் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

ராஜா யாழ்ப்பாணம்
அஜித் -திரிஷா நடித்த
ஜி
பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்
4 ஆவது வெற்றிவாரமாக
தனுஷ், ஸ்ரீதேவி, கருணாஸ் நடித்த
தேவதையைக் கண்டேன்
பு.நே. 11.00, 3.00, 7.00, 10.00
அடுத்த வெளியீடு திருப்பாச்சி

நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
15.02.2005 முதல் அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க காதல் என்னும் திரை ஒவியம் திரையிடப்பட்டுள்ளது.
காதல் கா.நே(பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30
டைடானிக் டைடானிக் மறு அறிவித்தல் வரை காண்பிக்கப்படமாட்டாது.

நிறைஞ்சனாஸ் சங்கானை
ரஜனி, அம்பிகா, சத்தியராஜ் நடித்த
நான் சிகப்பு மனிதன்
கா.நே. (பு.நே) 11.00, 2.45, 6.00

தேவை
தையல் வேலை தெரிந்த ஆண்கள் உடன் தேவை. மற்றும் தையல் வேலை பழக விரும்புவர்களும் தேவை.
தொடர்பு:
மேவின் தையல் நிலையம்,
இல.28, நவீன சந்தை
மேல் மாடி, யாழ்ப்பாணம். (சி-3817)

மனோகரா திரையரங்கு யாழ்ப்பாணம்
M.குமரன் Son of மகாலட்சுமி
கா.நேரம்: 10.30, 2.30
வெற்றி வாரமாக - இளைய தளபதி விஜய். திரிஷா நடித்த
திருப்பாச்சி கா.நேரம்: 6.30, 9.30 (பு.நே.)
18 முதல் விஜயின் சுக்ரன்

யாழ்.பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்
இராமநாதன் நுண்கலைக்கழகப் பரீட்சைகள் பற்றிய அறிவித்தல்
நுண்கலைமாணி (நடனம்) கற்கை நெறிக்கான முதலாம் வருட, இரண்டாம் அரையாண்டு செய்முறை மீள்பரீட்சை ADN - 1204 17.02.2005 அன்று நடைபெறும்.
துணைவேந்தர்.
15.02.2005.
(C/3823)

செவ்விளக்கு
-நாடகம்-
புரட்சியின் பேரொளியில் இருளார்ந்த இரவு முடிவுறும் ஓர் நாள்
காலம்: 19.02.2005 (சனி)
20.02.2005 (ஞாயிறு)
இடம்: யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட வளாகம்
(O.LB கட்டடத்திற்கு முன்னுள்ள திறந்தவெளி)
Five Theatre Students Group
University Of Jaffna.
விளம்பர அனுசரணை: நமது ஈழநாடு

அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு ஓர் நற்செய்தி
* அரிசி, மிளகாய், உழுந்து, கோப்பி போன்றவற்றை தேவைக்கேற்ப மிருதுவாக அரைப்பதற்கு ஏற்ற உலகப் பிரசித்தி பெற்ற இயந்திரங்களான கெனடி, நவின், அமுதா பிராண்டுகள், டீசல் எஞ்ஜின் 5 குதிரைச் சக்தி முதல் 25 குதிரைச் சக்தி வரை அதிவேகமானதும், வேகம் குறைந்ததுமான இயந்திரங்களைப் பெற்றுக் கொள்ளவும்,
* நெல் குற்றுவதற்கான இயந்திரங்களை (ஒரு நாளைக்கு 3 தொன் வரை குற்றக் கூடியது) கைதேர்ந்த தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு பொருத்தவும் மறுசீர் செய்துகொள்ளவும்,
* தோல் நீக்கும் இயந்திரம் (HULLER), பொலிஷர் (POLISHER) அவற்றிற்கான உதிரிப்பாகங்கள், பட்டி வகைகள், நெற் (சல்லடை) வகைகள், ஈர அரிசி அரைக்கும் இயந்திரங்கள், கிறைண்டர், பிளேட் வகைகள், உதிரிப் பாகங்கள் 1/2 குதிரைச் சக்தி முதல் 35 குதிரைச் சக்தி வரை மோட்டார் ஸ்டாட்டர் ரேசர் வகைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்:-
ரீ.இ. பிள்ளை அன் சன், 218, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
சமுத்திரா ரேட்ஸ் லிமிட், 117, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2938
(C/3824)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தமிழ் தெரியாத பொலிஸ்காரர் பெற்ற குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிப்பு!

## யாழ்.மேல்நீதிமன்ற நீதிவான் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

தமிழ் தெரியாத பொலிஸ் மொழிபெயர்ப்பாளர் சந்தேக நபரிடமிருந்து குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதிவுசெய்தமையை ஏற்றுக்கொள்ளமுடியாதென யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மேற்படி வாக்குமூலத்தை நிராகரித்தார்.

கிளைமோர் குண்டொன்றை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த நித்தியானந்தனுக்கு எதிராக யாழ்.மேல் நீதிமன்றத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் சட்டமா அதிபரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மேற்படி வழக்கு நேற்று யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சந்தேக நபரான நித்தியானந்தனிடம் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதிவுசெய்த பொலிஸ் மொழிபெயர்ப்பாளர் சரத் முனசிங்க ஆஜராகியிருந்தார்.

இவரது சாட்சியத்தின்போது அவரால் தமிழை சரியாக விளங்கிக்கொள்ளவோ, கேள்விகளுக்கு பதிலளிக்கவோ முடியாது திணறினார். இதனை அவதானித்த நீதிபதி தமிழ்மொழி தெரியாத ஒருவரால் குற்றஒப்புதல் வாக்குமூலம் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. இதனை ஏற்றுக் குற்றம் செய்தவருக்கு நீதி வழங்கமுடியாது என்றும் தாக்கல் செய்யப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்றுக் கொள்ளமுடியாது எனவும் தெரிவித்த நீதிபதி, மார்ச் 16ஆம் திகதிக்கு வழக்கை ஒத்தி வைத்தார்.

# கருணாவின் நெருங்கிய சகாக்கள் ஆழ ஊடுருவும் படையணியில்

(கொழும்பு)

கருணாவுடன் சேர்ந்த இயங்கிய சிலரை இராணுவப் புலனாய்வுத்துறையினர் ஆழ ஊடுருவித் தாக்கும் படையணியில் இணைத்திருப்பதாக இணையத்தளத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிள்ளையான், மங்களன் வாத்தியார், றீகசீலன் போன்றவர்களை கிழக்கு மாகாணத்தில் செயற்படும் ஆழ ஊடுருவித் தாக்கும் படையணிக்கும்

குணம், பாரூக் ஆகியோரை வன்னி மாவட்டத்துக்கான ஆழ ஊடுருவித் தாக்கும் படையணிக்கும் படைத் தலைமை இணைத்திருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# அரசியற்துறைப் பொறுப்பாளர் இன்று சம்பூருக்கு விஜயம்!

(திருகோணமலை)

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இன்று திருகோணமலை சம்பூருக்கு விஜயம் செய்து அங்குள்ள மக்களைச் சந்தித்துக் கலந்துடையாடவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது, சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை, அவர் பார்வையிடுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், சம்பூரிலுள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகத்தில் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பேச்சு நடத்துவார் என்றும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

# கச்சதீவு வருடாந்த உற்சவம்குறித்து செயலகத்தில் கலந்துரையாடல்

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா தொடர்பான கூட்டம் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் தலைமையில் நேற்று நடைபெற்று சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய இன்று காலை 9.00 மணிக்கு குறிகட்டுவான் இறங்குதுறையிலும், நெடுந்தீவிலும் பக்தர்கள் பிரயாணம் செய்யவிருக்கும் படகுகள் கடற்படையினரால் சோதனை செய்யப்பட்டு படகுகளுக்கான தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

உற்சவத்தில் கலந்துகொள்ளவிருக்கும் பக்தர்கள் அனைவரும் தமது தேசிய அடையாள அட்டையைத் தம்முடன் எடுத்துவருமாறும், குறிகட்டுவானிலிருந்தும் நெடுந்தீவிலிருந்தும் செல்லும் பக்தர்களைத் தவிர, ஏனைய இடங்களிலிருந்து புறப்படும் பக்தர்கள் பாதுகாப்புக் காரணங்களுக்கு அமைய தம்மை குறிகட்டுவானில் அல்லது நெடுந்தீவில் பதிவுசெய்து கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

தற்காலிக மலசலகூடம், சுகாதார வசதிகள், தற்காலிக கொட்டகைகள், நீர்விநியோகம் என்பன தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

## யாழ். நகரில் நேற்று...

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச நிவாரணங்கள் கிடைக்காததை ஆட்சேபித்தும் யாழ்.நகரில் நேற்று மாபெரும் கண்டனப் பேரணியொன்று நடைபெற்றது.

இந்தக் கண்டனப் பேரணியில் யாழ்.மாவட்ட கூட்டுறவாளர்கள், சனசமூக நிலையங்களைச் சேர்ந்தவர்கள், பெண்கள் அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

காலை 10 மணியளவில் நல்லூர் கிட்டு பூங்கா முன்னால் ஒன்றுகூடிய ஆயிரக்கணக்கான மக்கள் -

'சுனாமி நிதியில் ஆயுதக் கொள்வனவா?', 'இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளிடம் ஒப்படை', 'நிராயுதபாணிகளாக இருக்கும் புலிகளை படுகொலை செய்யாதே', 'ஈழத்தமிழர்களின் அவலநிலைகளையும் சர்வதேசமே கண்காணித்துக்கொள்', 'சர்வதேசம் சிங்கள தேசத்துக்கு வழங்கியது போதும், தமிழ்மக்களைப் பாதுகாத்துக்கொள்' போன்ற பதாதைகளை ஏந்தியவாறு அணிதிரண்டு பருத்தித்துறை வீதியூடாகச் சென்று நல்லூர் குறுக்கு வீதியூடாக யாழ். மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தைச் சென்றடைந்தனர்.

இவர்கள் யாழ்.மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அதிகாரியிடம் காலை 11 மணியளவில் தமது மகஜரைக் கையளித்தனர்.

கூட்டுறவாளர் சார்பாக க.கனகசபாபதியும், சனசமூக நிலையங்களின் சமாசம் சார்பாக செல்வக்குமரனும், பெண்கள் பண்பாட்டு மையம் சார்பாக சிவரதி ராஜ்குமாரும், மகளிர் அமைப்புக்கள் சார்பாக இந்திராணி தங்கராஜாவும் மகஜர்களைக் கையளித்தனர்.

தொடர்ந்து அணிதிரண்டு சென்று அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலய யாழ்மாவட்ட இணைப்பாளரிடமும் மகஜர் ஒன்றைக் கையளித்தனர். தொடர்ந்து வாகன ஊர்வலமாக யாழ்.மாவட்ட செயலகத்துக்குச் சென்று, அரசாங்க அதிபரிடம் மதியம் 12.45 மணியளவில் மகஜரைக் கையளித்தனர்.

மகஜரைப் பெற்றுக்கொண்ட அரசாங்க அதிபர் கருத்துத் தெரிவிக்கையில் - மேற்படி மகஜரை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சமர்ப்பிப்பதாகவும், யாழ்.மாவட்ட மக்களுக்கு சிறந்த முறையில் நிவாரண உதவிகள் கிடைப்பதற்கு தன்னாலான முயற்சிகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

| நாணய மாற்று வீதம் | | |
|---|---|---|
| நாணயம் | கொள்விலை | விற்பனை விலை |
| அமெரிக்க டொலர் | 98.94 | 99.87 |
| ஸ்ரேலிங் பவுண் | 186.20 | 188.87 |
| யூரோ | 127.77 | 129.95 |
| சுவிஸ் பிராங் | 81.96 | 83.89 |
| யென் | 0.9358 | 0.9539 |

## கொம்மாந்துறையில் இளைஞர் மீது சூடு!

மட்டக்களப்பு கொம்மாந்துறையில் நேற்றுமுன்தினம் இரவு, 22 வயதுடைய இளைஞரொருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். கொல்லப்பட்டவர், பொபி எனப்படும் எஸ்.சசிதரன் என அடையாளம் காணப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது, இவரை எதிர்கொண்ட இரண்டு இளைஞர்களில் ஒருவர், இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பின் கொம்மாந்துறைப் பகுதியில் நேற்றுமுன்தினமிரவு சுட்டுக்கொல்லப்பட்ட சம்புநாதன் - சசிகரன் (வயது 22) விடுதலைப் புலிகளின் உறுப்பினர் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்ததை, விடுதலைப் புலிகள் மறுத்துள்ளதாக 'தமிழ் நெற்' இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இந்த இளைஞன் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் அல்லவென, விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதாக அந்த இணையத் தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த இளைஞர் மத்திய கிழக்கு நாடொன்றில் வேலை பார்த்துவிட்டு கடந்த 3 மாதங்களுக்கு முன்னரேயே நாடு திரும்பியிருந்தாகவும், இவரது சொந்த இடம் வந்தாறு மூலையெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## அரசுடனான...

அவர் அதில் மேலும் தெரிவிக்கையில்- நிட்டம்புவில் நடந்த கூட்டத்தில் சந்திரிகா அம்மையார் தம்மோடு உடன்பாடு இல்லாதவர்கள் வெளியேறலாம் என்ற கூற்று, ஜே.வி.பியை சுட்டிப் பேசவில்லை என்பது தெட்டத் தெளிவாகின்றது.

ஜனாதிபதி ஆற்றியதாகக் கூறும் உரைக்கு நேற்று ஜனாதிபதி செயலகத்திலிருந்து ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. தாம் அவ்வாறு கூறவில்லையென்றும், ஜே.வி.பியை அவ்வாறு குறிப்பிடவில்லை என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் பல்வேறு வேறுபாடுகள் இருந்தாலும் நாங்கள் நாட்டின் நன்மைக்காகச் செயற்படுகின்றோம்.

ஒரு சில ஊடகங்கள் இந்தப் பிரச்சினையைப் பெரிதுபடுத்திக் காட்டுவதால்தான் இது பெரிதாக உருவாகியிருக்கிறது. சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தி, சீரழித்துக்கொள்வதுதான் பிற்போக்குவாதிகளின் திட்டமாகும் எனத் தெரிவித்தார்.

## கூட்டணிக் குழப்பத்தை...

ஜே.வி.பியும், ஜனாதிபதி சந்திரிகாவும் பகிரங்கமாக ஒருவரை ஒருவர் மிரட்டிக்கொண்டிருக்கின்றபோதும் - கூட்டணி இலகுவில் முறிவடைய வாய்ப்பில்லை என்றே கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது இரு கட்சிகளுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் கருத்து மோதல்கள் பிளவை ஏற்படுத்தினால் ஆளும் கூட்டணி அரசாங்கம் வீழ்ச்சியடைந்து, எதிர்க்கட்சியான ஐ.தே.கவுக்கு அது வாய்ப்பாகிவிடும் என்பதை இரு தரப்பும் உணர்ந்துள்ளன. ஐ.தே.கவுக்கு வாய்ப்பினை உருவாக்கிக் கொடுக்கக்கூடாதென் பதில் இருதரப்பும் உறுதியாக இருப்பதாகவும் - இதனால் தற்போதைய கருத்து மோதலகளுக்கு முடிவுகாணும் முயற்சியில் இருதரப்பு உயர்மட்டத் தலைவர்களும் திரைமறைவு முயற்சிகளில் இறங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஜனாதிபதி செயலகம்....

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளதாவது.

ஜனாதிபதி சந்திரிகா தனது உரையில் புலிகளின் தலைவர் பிரபாகரன் என்ற பெயரைப்பாவிக்கவில்லை. அத்துடன் இலங்கையின் ஒரு பகுதிக்கு யாரும் உரிமைகோருவதாகவும் குறிப்பிடவுமில்லை.

இந்தக்கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி -

நாட்டின் சமாதான நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பை வெளியிட்டு வரும் அரசாங்கத்தின் கூட்டணிக் கட்சிகள் தாம் விரும்பினால் அரசாங்கத்திலிருந்து விலகிச் செல்லலாமெனத் தெரிவித்திருந்தார். ஆனாலும் ஜே.வி.பி என்ற ஒரு கட்சியின் பெயரை ஜனாதிபதி குறிப்பிடவில்லை. கூட்டணியிலுள்ள அனைத்துக் கட்சிகளையும் சேர்த்தே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஐ.தே கட்சியின் நடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிக்கையில் -

ஜே.வி.பிக்கும் சுதந்திரக்கட்சிக்கும் இடையிலான முரண்பாட்டினை ஜனாதிபதி பகிரங்க மேடைஒன்றில் ஏற்றுக் கொண்டுள்ளார். இவர்களுக்கிடையேயான இந்தக் கருத்து மோதல் தற்போதைய யுத்தநிறுத்தத்திற்கும் பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளது எனத் தெரிவித்தார்.

# படுகொலைகளைக் கண்டித்து...

அமைப்புக்களின் ஒன்றியத்தைச் சேர்ந்த அ.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில், கிளிநொச்சி வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தைச் சேர்ந்த அ.வேழமாலிகிதன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கண்டன உரைகளை நிகழ்த்தினர்.

பின்னர், கிளிநொச்சி அரச செயலகத்தில் மேலதிக அரச அதிபர் எஸ்.வேதநாயகனிடமும் தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் போராளி செல்வியிடமும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

இதேவேளை, லெப். கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகளதும், மாமனிதர் அரியநாயகம் சந்திரநேருவினதும் கொலைகளைக் கண்டித்தும், விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட சமாதான செயலகம் மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலைக் கண்டித்தும், மன்னார் தாழ்வுபாட்டில் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டதைக் கண்டித்தும் - மன்னாரில், மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டப் பேரணி நேற்று நடைபெற்றது.

மன்னார் மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், நேற்றுக்காலை 10.30 மணியளவில் இந்தக் கண்டனப் பேரணி நடத்தப்பட்டது.

மன்னார் வைத்தியசாலைக்கு முன்பாக ஆரம்பமான இந்தப் பேரணி, பொது விளையாட்டு மைதானத்தை வந்தடைந்து, அங்கிருந்து மன்னார் பஸ் நிலையத்தைச் சென்றடைந்து அங்கு நிறைவுற்றது.

இந்தப் பேரணியில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டதோடு, அரசுக்கெதிரான கோசங்களை எழுப்பி, தமது கண்டனத்தை வெளிப்படுத்தியிருந்தனர். 'அரசே உனது அட்டகாசத்தை நிறுத்து' - 'எமது உரிமையை மதித்து நட' - 'எம்மை அடக்கி ஆள உன்னால் முடியாது' - உள்ளிட்ட கோசங்களை மக்கள் எழுப்பினர்.

இந்த நிகழ்வில் மன்னார் மறை மாவட்ட ஆயர் இராஜப்பு ஜோசப் ஆண்டகை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிசோர், வினோநோதராதலிங்கம் மற்றும் மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன் ஆகியோர் கண்டன உரைகளை ஆற்றினர்.

இந்த நிகழ்வில், மன்னார் மாவட்ட தொழிற்சங்கங்களின் இணையம், வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம், மாதர் சங்கம், தமிழ் மாணவர் பேரவை, தேசிய எழுச்சிப் பேரவை, மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஆகியவற்றால் - ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், அரச சமாதான செயலகம் மற்றும் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகம், ஜப்பானிய சிறப்புத் தூதுவர், நோர்வேயின் சிறப்புத் தூதுவர், இந்தியத் தூதுவர், மன்னார் மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர், மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை, யாழ். மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை ஆகியோருக்கான மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

இதேவேளை, படுகொலைகளைக் கண்டித்து, நேற்று முன்தினமும், நேற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் வெகுஜனப் போராட்டங்கள் நடைபெற்றன.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட கொக்கட்டிச்சோலை, போரதீவு ஆகிய இடங்களில் நடைபெற்ற இந்தப் போராட்டங்களில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டனர்.

## சந்திரநேரு...

பளுகாமத்திலுள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகமொன்றில் இந்தச் சந்திப்பு நடைபெற்றதாகத் தெரியவருகிறது. இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மாமனிதர் சந்திரநேருவின் மறைவு குறித்து தமது கவலையையும், அனுதாபத்தையும் வெளியிட்டார்.

அத்துடன், அவர் தமிழ்த் தேசியத்திற்காக ஆற்றிய பணியையும் தமிழ்ச்செல்வன் நினைவுபடுத்தினார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.02.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தர) ப் பரீட்சை 2005 ஏப்ரல்
# GeneralCertificate of Education (Advanced Level) Examination, April 2005

வணிகக் கல்வி I (பகுதி II)
Business Studies I (Part II)

இரண்டு மணித்தியாலம் (two hours)

**ஆசிரியர் – பசில்**

அறிவுறுத்தல்கள் :

பகுதி I இலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடைகள் இவ்வினாப்பத்திரத்திலேயே எழுதப்படுதல் வேண்டும்.

ஒவ்வொரு வினாவும் 01 புள்ளியைக் கொண்டதாகும்.

01 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கும் போது பொருத்தமான பெட்டியில் "✓" என அடையாளமிடுக. உ-ம்: ✓

பகுதி I, பகுதி II ஆகிய இரண்டுக்கும் விடையெழுதிய பின்பு இரு தொகுதி விடைத்தாள்களையும் ஒன்றாக இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்கவும்

பகுதி "அ"

1. (i) வணிக நிறுவனம் ஒன்றினுடைய பிரதான அம்சங்களை கூறி சுருக்கமாக விபரிக்குக.

(ii) அ) உற்பத்தியின் 3 வகைகளை கோட்டுப்படம் மூலம் விபரிக்குக.

ஆ) தொழிற் சிறப்புத்தேர்ச்சியின் பயன்கள் எவை?

(iii) அ) இலத்திரனியல் வர்த்தகம் எனப்படுவது யாது?

ஆ) அதன் தொழிற்பாட்டிற்கு அவசியமானவற்றை தருக?

இ) இதில் கொடுப்பனவிற்கு பயன்படும் முறைகள் எவை?

(iv) அ) மனித சமுதாயத்தில் பரம்பரை காலங்களை அவர்களது செய்றபாடுகளுடன் தொடர்புபடுத்தி எவ்வாறு வகைப்படுத்தலாம்?

ஆ) பொருட்களையும் சேவைகளையும் வேறுபடுத்துக?

(v) அ) சந்தை எனப்படுவது யாது?

ஆ) பரிமாற்றம் நிகழ்வதற்கு அவசியமானவற்றை தருக?

02. (i) பின்வரும் நிறுவனங்களிலிருந்து பொதுமக்கள் பெறக்கூடிய அனுகூலங்களைத் தருக?

அ) அரச உடமை நிறுவனங்கள்

ஆ) தனியார் உடமை நிறுவனங்கள்

(ii) அ) தனிவியாபாரத்தை விரிவுபடுத்துவதில் உள்ள பிரச்சினைகள் எவை?

ஆ) கம்பனி அமைப்பு அதிகம் நிறுவப்படும் போதிலும் சிலர் ஏன் பங்குடமைகளை நிறுவுகின்றனர்?

(iii) 1992ம் ஆண்டு 11ம் இலக்க கூட்டுறவு திருத்த சட்டத்தில் கூறப்பட்டுள்ள நியமங்கள் எவை?

(iv) அ) வரையறுத்த பொதுக்கம்பனி மீதான கட்டுபாடுகள் எவை?

ஆ) வரையறுத்த பொதுக்கம்பனிகள் வெற்றிகரமாக செயற்பட முடிவதற்கான காரணங்கள் எவை?

(v) வேறுபடுத்துக.

அ) அமைப்பு அகவிதி - அமைப்பு புறவிதி

ஆ) பல்தேசிய கம்பனி - அங்கீகாரம் பெற்ற கம்பனி

இ) வாக்குரிமையற்றபங்கு - முன்னுரிமைப்பங்கு

03. (i) அ) வர்த்தக வங்கிகளின் நவீன வங்கிச் சேவைகளைப் பெயரிடுக.

ஆ) வங்கிகள் வைப்பாளர்களைக் கவர்ந்துகொள்ள மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளைத் தருக.

(ii) அ) பணத்தின் சட்ட அங்கீகாரம் ( Legal Tender ) என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

ஆ) வெளிநாட்டுப் பயணங்களின் போது பயணிகள் காசோலையை பயன்படுத்துவதில் உள்ள பயன்கள் எவையாகவுள்ளன.

(iii) மத்திய வைப்பு முறையினால் ( Central Depository System ) நிறைவேற்றப்படும் பணிகளைக் கூறுக.

(iv) அ) பங்குச் சந்தையில் உபயோகிக்கப்படும் சுட்டிகளைக் குறிப்பிடுக.

ஆ) வணிகப்பத்திரம் வாக்குறுதிச்சீட்டு என்பவற்றை வேறுபடுத்துக.

(v) வேறுபடுத்துக.

அ) வர்த்தக வங்கி - அலகுபொறுப்பாட்சி நிறுவனம்.

ஆ) வாடகைக் கொள்வனவு - குத்தகைமுறை

பகுதி "ஆ"

4. (i) நிதி நிறுவனம் ஒன்று கடன் வழங்கும் முன்வாடிக்கையாளர் தொடர்பாக எவற்றை கவனத்தில் கொள்ளும்.

(ii) கூட்டுறவுச் சங்கம் ஒன்று அதன் விற்பனையை பெருக்குவதற்கு பின்பற்றக்கூடிய வழிமுறைளைத் தருக.

(iii) அ) இலங்கையில் இருந்து பின்வரும் பொருட்களை அதிகம் கொள்வனவு செய்யும் நாடுகள் எவை?

a) தேயிலை b) இறப்பர் c) தைத்த ஆடைகள் d) இரத்தினக் கற்கள்

ஆ) ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் இருபிரதான சேவைகளைத் தருக?

(iv) அ) போக்குவரத்து வலையமைப்பு எனப்படுவது யாது?

ஆ) சிறந்த போக்குவரத்து முறையை தெரிவு செய்யும் போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் எவை?

(v) அ) குறைபாடுடைய போக்குவரத்தால் வணிகத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை விபரிக்குக?

ஆ) அண்மைக் காலத்தில் இலங்கையில் தொடர்பாடல் துறையின் வேகமான முன்னேற்றத்திற்கான காரணத்தை ஆராய்க

05. (i) அ) காப்புறுதி எவ்வழிகளில் வணிகத்திற்கு உறுதுணையாக உள்ளது?

ஆ) ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் நட்டஈட்டை பெறக்கூடிய இழப்புக்கள் எவை?

(ii) அ) இழப்பீட்டு உறுதிதத்துவம் என்பதை விபரிக்குக?

ஆ) இத்தத்துவம் எவ் அபாயங்களுக்கு பொருத்தமற்றது?

(iii) அ) தொடர்பாடலின் முக்கிய அம்சங்களை பெயரிடுக?

ஆ) "வணிகத்தின் வளர்ச்சிக்கு விளைதிறனான அகத் தொடர்பாடல் அவசியம்" இக்கூற்றை ஆதாரப்படுத்துக.

(iv) அ) தொடர்பாடல் துறையில் ஏற்பட்டுள்ள நவீன மயமாக்கல்களைத் தருக?

ஆ) "சிறந்த தொடர்பாடலுக்கு தடைகள் முட்டுக்கட்டையாக உள்ளன" அவ்வகைத் தடைகள் ஏற்படுவதற்கு காரணங்கள் எவை?

(v) வேறுபடுத்துக.

அ) சாதாரண தொலைபேசி - கையடக்க தொலைபேசி

ஆ) உள்ளக வலையமைப்பு - பரந்த வலையமைப்பு

இ) இலத்திரனியல் வர்த்தகம் - தொலை வர்த்தகம்.

06. (i) "காலத்திற்குகாலம் வியாபார நடவடிக்கைகளில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன". சில்லறை வியாபாரத்தில் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களை குறிப்பிடுக.

(ii) மொத்த வியாபாரியை எவ்வாறு பல்வேறாக வகைப்படுத்த முடியும்.

(iii) சர்வதேச வியாபார போக்கில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை கூறி விளக்குக.

(iv) அ) "சில்லறை வியாபாரம் ஒன்றை நடாத்துவதிலும் பார்க்க மொத்த வியாபாரம் ஒன்றை நடாத்துவது கடினமானதாகும்" இதற்கான காரணங்களைத் தருக.

ஆ) விற்பனை முறைகளில் ஒன்றான கேட்ப்பு முறையை பின்பற்றுவதில் உள்ள நன்மைகள் எவை?

(v) சுருக்கமாக விளக்குக.

அ) வலைய வியாபாரச் சந்தை ஆ) எதிர் வர்த்தகம். இ) நாணயக்கடிதம்.

## வணிகக் கல்வி II (பகுதி II)
## Business Studies II (part II)

**அறிவுறுத்தல்கள்:**
**ஒவ்வொரு வினாவுக்கும் 15 புள்ளிகள் வழங்கப்படும். பகுதி அ பகுதி ஆ ஆகிய இரண்டிலும் குறைந்தது இரு வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

பகுதி 'அ'

1. (i) அ) தொழில் நிறுவனங்களில் பிணக்குக்கள் ஏற்படும்போது தொழிற்சங்கங்கள் மேற்கொள்ளுகின்ற கைத்தொழில் நடவடிக்கைகள் எவை?

ஆ) கூட்டு உடன்படிக்கையின் பயன்கள் எவை?

(ii) அ) கடைஅலுவலக ஊழியர் சட்டப்படி தொழில்வழங்குனர்கள் மேற்கொள்ள வேண்டியவற்றைத் தருக?

ஆ) பணிக்கொடை கணிப்பிடப்படும் வேறுபட்டமுறைகள் எவை?

(iii) அ) நுகர்வோரைப் பாதுகாக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் எவை?

ஆ) நுகர்வோர் சங்கம் ஒன்றின் பணிகளை தருக?

(iv) அ) முகாமையாளருக்கு இருக்க வேண்டிய திறன்கள் எவை?

ஆ) முயற்சியாண்மையை விருத்தி செய்வதற்கு நீர் கூறக்கூடிய ஆலோசனைகள் எவை?

(v) வேறுபடுத்துக.
அ) SLS குறி - வியாபாரக் குறி
ஆ) முயற்சியாளன் - முகாமையாளர்
இ) வணிக விழுமியம் சமூகப்பொறுப்பு

2. (i) இலங்கைக்கு சிறிய நடுத்தர வணிக முயற்சிகள் முக்கியமானவை என்பதற்கு ஆறு நியாயங்களைத் தருக?

(ii) புதிய முயற்சியில் ஒருவர் ஈடுபட விரும்புகின்றார் அவருக்கு இருக்க வேண்டிய ஆறு பண்புகளைக் கூறிவிளக்குக?

(iii) அ) நுகர்வோர் நடத்தை எனப்படுவது யாது?

ஆ) ஒருவரின் கொள்வனவில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?

(iv) அ) ஒரு சிறு முயற்சியாளன் எவற்றை திட்டமிட வேண்டும்?

ஆ) நிறுவனம் ஒன்றிற்கு திட்டமிடுதலின் அவசியத்தைக் கூறுக?

(v) வேறுபடுத்துக.
அ) நோக்கம் - குறிக்கோள்
ஆ) ஒழுங்கமைப்பு - ஒழுங்கமைத்தல்
இ) முகாமையாளர் - ஊழியர்

3. (i) அ) முகாமை என்பதை வரையறுத்துக் கூறுக?

ஆ) உள்ளீட்டு வெளியீட்டு முகாமைத்தொழிற்பாடுகளை எளிய விளக்கப்படம் மூலம் காட்டுக?

(ii) அ) வேலை விரிவாக்கம்இ வேலை சிறப்பாக்கல் என்பவற்றை வேறுபடுத்துக?

ஆ) நிறுவனம் ஒன்றிற்கு கையளித்தல் எவ்வழிகளில் முக்கியமானது?

(iii) அ) ஒரு அமைப்பு வரைபடம் மூலம் ஒரு வணிகம் தொடர்பாக நீர் என்ன தகவல்களை சொல்ல முடியும்?

ஆ) கட்டுபாட்டு விசாலத்தின் பிரமாணங்களை விபரிக்குக?

(iv) அ) தலைமைத்துவம் எனப்படுவது யாது? சிறந்த தலைவருக்கு இருக்க வேண்டிய பண்புகள் எவை?

(v) வேறுபடுத்துக.
அ) பின்னூட்டல் கட்டுப்பாடு - செய்முறைக்கட்டுப்பாடு
ஆ) வினைத்திறன் - விளைதிறன்
இ) வரி விடுமுறை - வரிச்சலுகை.

பகுதி 'ஆ'

4. (i) பயிற்சியளித்தல் எனப்படுவது யாது? வெவ்வேறு பயிற்சியளித்தல் முறைகளை விளக்குக?

(ii) அ) வேலை உற்பத்தி முறையின் பண்புகள் எவை?

ஆ) உரியநேர உற்பத்தி முறையின் பயன்களைத் தருக?

(iii) அ) இருப்புக்கட்டுப்பாடு என்பதனுள் எவை உள்ளடக்கப்படும்?

ஆ) வணிகமொன்றினது உற்பத்திக் கிரயங்கள் என்னவாகவுள்ளன?

(iv) அ) உற்பத்தி தொழிற்பாடுகள் எவை?

ஆ) ஒரு வணிகம் எவற்றின் அடிப்படையில் உற்பத்தியில் ஈடுபடும்?

(v) அ) பங்களிப்பு எனப்படுவது யாது?

ஆ) இலாபநட்டமற்ற புள்ளியின் முக்கியத்துவத்தை தருக?

5. (i) அ) மூலதனக் கட்டமைப்பு நிதிக்கட்டமைப்பு என்பவற்றை வேறுபடுத்துக?
ஆ) மூலதன இணைப்பு விகிதத்தின் முக்கியத்துவம் யாது?

(ii) X நிறுவனத்தின் விற்பனைகள் ரூபா 25000 கொள்வனவுகள் ரூபா 18400 விற்பனைக்கிரயம் ரூபா 18300 செலவுகள் ரூபா 6700 வரி ரூபா 500 கடன்பட்டோர் ரூபா2500 பின்வருவனவற்றைக் கணிக்குக?

அ) தேறிய இலாப வீதம் யாது?
ஆ) கடன்படடோரிடம் சேகரிக்கும் காலம் யாது?
இ) கடன் கொடுத்தோருக்கு பணம் செலுத்தும் காலம் யாது?

(iii) அ) காரணிப்படுத்தும் நடவடிக்கை எவ்வாறு வணிக நிறுவனத்திற்கும் அதில் ஈடுபடும் நிதி நிறுவனத்திற்கும் உதவும்?

ஆ) மூலதன இணைப்பு விகிதத்தின் பயன் யாது?

(iv) அ) நிதி நிறுவனம் ஒன்றில் கடன் பெறுவது எச்சூழ்நிலைகளில் அனுகூலமாக அமையலாம்?

ஆ) காசுப்பாய்ச்சல் கூற்று ஒன்றைத் தயாரிப்பது வணிகத்திற்கு எவ் வழிகளில் பயன்மிக்கதாகின்றது?

(v) சுருக்கமாக விளக்குக.
அ) **A. B. C** பகுப்பாய்வு
ஆ) **ISO** குறி
இ) தரஉறுதி

6. (i) செயற்திட்டம் எனப்படுவது யாது? அது தயாரிக்கப்படுவதன் நோக்கங்கள் எவை?

(ii) மேம்படுத்தல் கலவையில் இடம்பெறும் மாறிகளைக் கூறி சுருக்கமாக விளக்குக?

(iii) அ) சமூக சந்தைப்படுத்தல் எண்ணக்கரு வணிக நிறுவனத்திற்கு எந்த மூன்று குறிக்கோள்களைக் கடைப்பிடிக்குமாறு ஊக்குவிக்கின்றது?

ஆ) உற்பத்திப்பொருளின் விலையிடலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?

(iv) அ) ஒரு உற்பத்தியாளன் பொதியிடுதலை மேற்கொள்ளும் போது எவற்றைப் பின்பற்றிக் கொள்ள வேண்டும்?

ஆ) விளம்பர முகவர் நிலையத்தின் பணிகள் எவை?

(v) வேறுபடுத்துக.

அ) கடைதல் விலை - ஊடுருவல் விலை.
ஆ) பண்டப்பெயர் - வியாபாரக் குறி
இ) சந்தைப்படுத்தல் ஆராட்சி - சந்தை ஆராய்ச்சி.

# சந்திரிகாவின் மொழி பேசுவது புலிகளுக்கு கடினமானதல்ல!

## உலகத் தமிழர் இயக்கப் பொறுப்பாளர்

(ரொறன்ரோ)

விடுதலைப் புலிகளுக்கு சந்திரிகாவின் மொழியில் பேசுவது கடினமானதொன்றல்லவென, கௌசல்யன் நினைவு வணக்கக் கூட்டத்தில் உலகத் தமிழர் இயக்க கனடா பொறுப்பாளர் நாவலன் தெரிவித் தார்.

லெப்.கேணல் கௌசல்யன், அவருடன் சென்ற போராளிகள் மற்றும் மாமனிதர் சந்திரநேரு ஆகியோரின் நினைவு வணக்க கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கனடா ரொரன்ரோவில் நடைபெற்றது.

மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டத்தின் மத்தியில் நடைபெற்ற கூட்டத்தில் - உலகத் தமிழர் இயக்க பொறுப்பாளர் நாவலன் மற்றும் ஊடகவியலாளர், உணர்வாளர்கள் எனப் பலர் உரையாற்றினர்.

விடுதலைப் புலிகளுக்கு சந்திரிகாவின் மொழி பேசுவது கடினம் ஒன்றும் இல்லை. இதனை சந்திரிகா உணர்ந்து கொள்ள வேண்டும்.

அமைதி, ஆற்றல், பண்பு, விருந்தோம்பல் என்றால் கௌசல்யன். இப்படியே அவரின் ஆற்றல்களை அடுக்கிச் செல்லலாமென்று நாவலன் தனது உரையில் மேலும் குறிப்பிட்டார்.

## ஏழு நீர்வீழ்ச்சிகளை அரசு விற்பனை

7 நீர்வீழ்ச்சிகளை விற்று மேல் கொத்மலை மின் உற்பத்தித் திட்டத்தினை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.


இந்தத் திட்டத்திற்கு தமது கடுமையான எதிர்ப்பை வெளியிட்ட ஜே.வி.பியின் அமைச்சர்களும், இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் மௌனித்திருந்ததாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (01)

## மேலும் 20 சடலங்கள் பொலிஸாரால் மீட்பு!

சுனாமியின் போது உயிரிழந்த மேலும் 20 பேரின் சடலங்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சுனாமி அனர்த்தத்தின் போது ரயிலில் பயணம் செய்து உயிரிழந்த இருபது பேரின் சடலங்களே தெல்வத்த என்ற இடத்தில் ஆறு வாரங்களின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டன.

# கொரிய கடற்படைக் கப்பலில் உதவிப் பொருட்கள் வந்தன!



தென்கொரிய கடற்படைக் கப்பல் ஒன்று 1.3 பில்லியன் ரூபா பெறுமதியான உதவிப் பொருட்களுடன் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

4300 தொன் எடை கொண்ட இந்தக் கடற்படைக் கப்பலில் 200 தொன் உதவிப் பொருட்கள் கொள்கலன்களில் அனுப்பப்பட்டுள்ளன.

குடிநீர், மீன், மருத்துவப் பொருட்கள் உள்ளடங்கிய பொருட்கள் இந்தக் கப்பல் மூலம் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டு, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் உத்தியோபூர்வமாக கையளிக்கப்பட்டன.



மட்டக்களப்பு வாகரையில், கௌசல்யன் உள்ளிட்ட போராளிகளின் படுகொலையைக் கண்டித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியின் முடிவில் இடம்பெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் உயிரிழந்த போராளிகளின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவிப்பதையும், வாகரைப் பிரதேச கட்டளைத் தளபதி லெப். கேணல் அறிவு பொதுச் சுடரை ஏற்றுவதையும், பேரணியில் கலந்துகொண்ட மக்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.